# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2015–2016

### மானியக் கோரிக்கை எண். 36


## ஓ. பன்னீர்செல்வம்
### நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2015

# பொருளடக்கம்


| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | முகவுரை | 1 |
| 2. | முக்கிய நடவடிக்கைகள் | 3 |
| 3. | துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு | 6 |
| 4. | ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி | 6 |
| 5. | பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012) | 8 |
| 6. | பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும் | 8 |
| 7. | பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017) | 10 |
| 8. | 2012–13 ஆம் ஆண்டுத் திட்டம் | 10 |
| 9. | 2013–14 ஆம் ஆண்டுத் திட்டம் | 10 |
| 10. | 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம் | 11 |
| 11. | 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம் | 11 |
| 12. | திட்டப் பணிகள் குறித்து ஆய்வு | 11 |
| 13. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் பங்கீட்டுக்கொள்ளும் திட்டங்கள் | 12 |
| 14. | 2015–16ம் ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான திருத்திய பங்களிப்பு | 13 |
| 15. | மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மாற்றியமைத்தல் | 15 |
| 16. | இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு | 17 |
| 17. | பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல் | 18 |
| 18. | மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள முக்கிய கருத்துருக்களுக்கு தீர்வு செய்தல் | 19 |
| 19. | மாநிலத்தில் செயல்படுத்தப்படும் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை ஆய்வு செய்தல் | 20 |
| 20. | புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு | 20 |
| 21. | புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல் | 22 |

| வரிசை எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 22. | பெருந் திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல் | 22 |
| 23. | ஆதாரம் அடிப்படையில் கொள்கை வகுப்பது | 23 |
| 24. | தெற்கு ஆசியா, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் | 25 |
| 25. | தரவு ஆய்வு | 30 |
| 26. | கல்வி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல் | 31 |
| 27. | சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல் | 31 |
| 28. | மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் | 32 |
| 29. | 2014–15ஆம் ஆண்டின் செயல்பாடு | 33 |
| 30. | 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம் | 33 |
| 31. | மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் | 34 |
| 32. | 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம் | 36 |
| 33. | 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம் | 36 |
| 34. | மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்கு திட்டங்களைச் செயல்படுத்துதல் | 37 |
| 35. | மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல் | 37 |
| 36. | சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள் | 37 |
| 37. | மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி | 38 |
| 38. | தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல் | 39 |
| 39. | துறைத் தலைமையிடங்கள் | 40 |
| 40. | மாநிலத் திட்டக்குழு | 41 |
| 41. | பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை | 53 |
| 42. | மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை | 80 |
| 43. | சென்னை மெட்ரோ இரயில் திட்டம் | 84 |
| 44. | கட்டம்–I இன் நீட்டிப்பு மற்றும் கட்டம்– II வழித்தடங்கள் | 88 |

# மானியக் கோரிக்கை எண்.36

# திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**“இந்தியாவிலேயே, முதலீட்டாளர்கள் நாடுகின்ற, முதன்மையான இடமாகத் தமிழகத்தை ஆக்குவதே இந்த அரசின் இலட்சியமாகும். முதலிடம் என்று நான் குறிப்பிடுவது முதலீட்டைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி, மிக முக்கியமாக நம் மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் ஆகியவற்றிலும் முதலிடம் பெறுவதே எனது இலட்சியம்”.**

**–மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்**
**புரட்சித் தலைவி அம்மா அவர்கள்**

## கொள்கை விளக்கக் குறிப்பு

**முகவுரை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடுத்த இரண்டு ஐந்தாண்டுத் திட்ட கால வரம்பை கருத்தில் கொண்டு, **2023**ஆம் ஆண்டு இறுதியில் மாநிலம் எய்த வேண்டிய இலக்குகளைக் கொண்ட, “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**”ஐ வெளியிட்டுள்ளார்கள். இந்த தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023**

நாட்டிலேயே மிகச் சிறந்த உள் கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மாநிலமாகவும், மனிதவள மேம்பாட்டுக் குறியீடுகளில் இந்தியாவில் முதன்மை மாநிலமாகவும், நமது மாநிலத்தை உயர்த்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது. மனிதவள மேம்பாட்டின் அனைத்து குறியீடுகளிலும், தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்றிடுவதை, பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் இலக்காகக் கொண்டுள்ளது. வேகமான, நீடித்து நிலைக்கத்தக்க மற்றும் அனைவரும் பங்கேற்கக்கூடிய பொருளாதார வளர்ச்சியைப் பெறுவதே இந்த பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த திட்ட நடைமுறையின் விளைவாக, வறுமை ஒழிக்கப்படுவதோடு, கூடுதலான மற்றும் மேம்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு, இம்மாநில மக்களின் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் வாய்ப்பு ஏற்படும்.

மாநிலத்திற்கான ஆண்டு திட்டங்கள் மற்றும் ஐந்தாண்டு திட்டங்களைத் தயாரித்தல் மாநிலத் திட்டச்செலவினங்கள், இருபது அம்சத் திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகிய திட்டங்களைக் கண்காணித்து ஆய்வு செய்தல் ஆகியவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பொறுப்புகள் ஆகும். நிர்வாகத் துறைகளால் சுற்றனுப்பப்படும் வளர்ச்சி திட்டங்கள் குறித்த கோப்புகளை இத்துறை கூர்ந்தாய்வு செய்கின்றது. இந்த நோக்கத்திற்காக பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்தும் மற்றும் நிர்வாகத்துறை என்ற முறையில் மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகளின் வல்லுநர்களின்

சிறப்புத் திறமைகளை கொள்கைகளை வகுக்க பயன்படுத்திக் கொள்கிறது. இத்துறை, மத்திய திட்டக் குழுவிற்கு பதிலாக ஏற்படுத்தப்பட்ட புதிய அமைப்பான “நிதி ஆயோக்” (NITI Aayog) உடன் கலந்துரையாடும் மாநில அரசின் முகமைத் துறையாகும். இத்துறை, அரசு மேற்கொள்ளும் புதிய முயற்சிகளுக்குத் தேவையான ஒருங்கிணைப்பு வேலைகளைச் செய்கிறது. இத்துறை, புவியியல் தகவலமைப்பு மூலம் மின்–ஆளுமை திட்டம் (e-governance) ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பது மற்றும் சிறப்பு முயற்சிகள் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் சென்னை மெட்ரோ இரயில் திட்டம் உட்பட சிறந்த, புதுமையான பல்முனைத் திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்தும் முயற்சிகளையும் மேற்கொள்கின்றது. துறையின் வலைத் தளமான *www.tn.gov.in/department/23*-ல் இத்துறையின் செயல்பாடுகள் ஆவணப்படுத்தப் பட்டுள்ளன.

## 1.0 முக்கிய நடவடிக்கைகள்

i. ஐந்தாண்டுத் திட்டங்களையும் ஆண்டுத் திட்டங்களையும் தயாரிப்பதுடன் முந்தைய மத்திய திட்டக்குழு மற்றும் புதியதாக உருவாக்கப்பட்ட “நிதி ஆயோக்” உடன் தொடர்புகொண்டு செயல்படுதல்;

ii. தொலைநோக்குத் திட்டம் தயாரித்தல், ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைநிலை ஆய்வு செய்தல், வளர்ச்சிக் குறியீட்டை அளவிடுதல் மற்றும் பெரிய அளவிலான திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

iii. மாநிலத்தின் இயற்கை வளங்களான நிலம் மற்றும் நீர் பயன்பாடு உட்பட முக்கிய திட்டங்களைத் தயாரித்து, செயல்படுத்துகின்ற திட்டங்களின் மீது மேற்பார்வை ஆய்வுகள் மேற்கொள்ளுதல்;

iv. திட்டப்பணிகள், இருபது அம்ச திட்டம், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மத்திய மாநில அரசுகள் பகிர்ந்துகொள்ளும் திட்டங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

v. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது;

vi. பெரிய உள்கட்டமைப்பு திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தலும் கண்காணித்தலும்;

vii. தொலையுணர்வு புவியியல் தகவல் அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்துவதற்கு ஊக்கமளிப்பது போன்ற பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் முகமைகளை உள்ளடக்கிய சிறப்பு மற்றும் புதுமையானத்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக ஒருங்கிணைந்து செயல்படுதல் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுக்க ஊக்கமளித்தல். கடந்த காலங்களில் அரசு செயல்பாடுகளை கணினிமயமாக்குவதிலும் உலக வர்த்தக அமைப்பின் ஒப்பந்தம் மற்றும் அதனால் மாநிலத்தில் ஏற்படும் தாக்கங்கள் குறித்த மாநிலத்தின் அணுகுமுறையினை வகுப்பதிலும் துறை முக்கிய பங்கு வகித்தது;

viii. சீரான பொருளாதார மற்றும் சமூக காரணிகளின் அடிப்படையில் சீரான வளர்ச்சியை உறுதி செய்யும் பொருட்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி மூலமாக திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துதல்;

ix. மாவட்ட திட்டக் குழுவின் ஒரு அங்கமாக செயல்படும் மாவட்ட திட்டப் பிரிவின் மூலமாக மாவட்டத்தின் வளர்ச்சி திட்டங்களை தயாரித்தல்;

x. மாநில வருவாய் மதிப்பீடுகள், பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண் கணக்கெடுப்பு, சமூகப் பொருளாதார ஆய்வுகள், சிறப்பு ஆய்வுகள், மாநிலப் பொருளாதாரத்தின் மாதாந்திர அறிக்கைகள் ஆகியவை குறித்து பொது மற்றும் தனியார் துறைகளிலிருந்து புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், மற்றும் பரவச் செய்தல்;

xi. திட்டப்பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு செய்தல்;

xii. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்கள் போன்ற சிறப்பு திட்டங்களை உருவாக்குதலும் செயல்படுத்துதலும் மற்றும் நக்சல்கள் பாதிக்கக்கூடிய பகுதிகளில் சமூக–பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் வரவு செலவு திட்டம் **2015–16**ல் புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டங்கள்;

xiii. மாநிலத்திட்டக்குழு, பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகிய துறைகள் செயல் படுவதற்கான வசதிகள் செய்தல்; மற்றும்

xiv. சிறப்பு முயற்சிகள் பிரிவின் கீழ் 'மெட்ரோ இரயில்' போன்ற புதிய மற்றும் சிறப்பு திட்டங்களை செயல்படுத்துதல்.

## 2.0 துறையின் செயல்பாடுகள் பற்றிய குறிப்பு

துறையின் செயல்பாடுகள் ஒவ்வொன்றின் தன்மை பற்றியும் தகுதிநிலை பற்றியும் கீழே சுருக்கமாக விவரிக்கப்பட்டுள்ளது.

## 2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் ஒதுக்கீட்டில் சீரான வளர்ச்சி

மாநில அரசின் திட்டச் செலவினங்கள் திட்ட ஒதுக்கீடுகளைவிட சீராக அதிகரித்து அதிக வளர்ச்சி விகிதங்களை ஊக்குவிக்கும் விதமாக உள்ளது. இவை ஒவ்வொரு ஐந்தாண்டு காலத்திற்கும் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் ஏறக்குறைய இரண்டு மடங்கு உயர்வதற்கு உதவியாக அமைந்துள்ளது என்பதை கீழ்கண்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:-

(ரூபாய் கோடியில்)

| திட்டம் | ஆண்டுகள் | ஏற்பளிக் கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் | விழுக் காடு |
|---|---|---|---|---|
| முதலாம் திட்டம் | 1951–1956 | 86 | 80 | 93.0 |
| இரண்டாவது திட்டம் | 1956–1961 | 186 | 188 | 101.1 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் | 1961–1969 | 608 | 613 | 100.8 |
| நான்காவது திட்டம் | 1969–1974 | 552 | 559 | 101.3 |
| ஐந்தாவது திட்டம் | 1974–1979 | 1,122 | 1,165 | 103.8 |
| ஆறாவது திட்டம் | 1980–1985 | 3,150 | 3,645 | 115.7 |
| ஏழாவது திட்டம் | 1985–1990 | 5,750 | 6,317 | 109.9 |
| ஆண்டுத் திட்டம் | 1990–1991 | 1,450 | 1,591 | 109.7 |
| ஆண்டுத் திட்டம் | 1991–1992 | 1,600 | 1,726 | 107.9 |
| எட்டாவது திட்டம் | 1992–1997 | 10,200 | 14,024 | 137.5 |
| ஒன்பதாவது திட்டம் | 1997–2002 | 25,000 | 25,036 | 100.1 |
| பத்தாவது திட்டம் | 2002–2007 | 40,000 | 43,568 | 108.9 |
| பதினோராவது திட்டம் | 2007–2012 | 85,344 | 92,656 | 108.6 |

## 2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007-2012)

மார்ச் 2012 ல் முடிவடைந்த பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம், பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 113 சதவீதம் அதிகரித்து, ரூபாய் 85,344 கோடி ஒதுக்கீட்டளவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. இத்திட்டம், 2007–2012 திட்டக் காலத்தில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 9 சதவீதத்தை அடைவதற்கான நோக்கம் கொண்டிருந்தது.

### 2.2.1 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒதுக்கீடுகளும் செலவினங்களும்

**ஆண்டுவாரியான ஒதுக்கீடு/ செலவினம்**

**பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான ஆரம்ப திட்ட ஒதுக்கீடு ரூபாய் 85,344 கோடி**

**(ரூபாய் கோடியில்)**

| ஆண்டுத் திட்ட வருடம் | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு (ஆண்டு வாரியாக) | செலவினம் |
|---|---|---|
| 2007–2008 | 14,000 | 14,224 |
| 2008–2009 | 16,000 | 16,275 |
| 2009–2010 | 17,500 | 17,834 |
| 2010–2011 | 20,068 | 20,465 |
| 2011– 2012 | 23,535 | 23,858 |
| **மொத்தம்** | **91,103** | **92,656** |

**துறைவாரியான ஒதுக்கீடு/ செலவினம்**

**(ரூபாய் கோடியில்)**

| **துறை** | **ஒதுக்கீடு** | **செலவினம்** | **விழுக்காடு** |
|---|---|---|---|
| வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்தவை | 11,145 | 10,427 | 93.6 |
| ஊரக வளர்ச்சி | 10,241 | 11,262 | 110.0 |
| எரிசக்தி | 10,743 | 12,669 | 117.9 |
| தொழில் மற்றும் கனிமங்கள் | 3,716 | 2,607 | 70.2 |
| போக்குவரத்து | 11,647 | 11,009 | 94.5 |
| சமூக சேவைகள் | 35,827 | 42,302 | 118.1 |
| ஏனையவை | 2,025 | 2,380 | 117.5 |
| **மொத்தம்** | **85,344** | **92,656** | **108.6** |

பதினோராவது திட்டக் காலத்தில் செலவினமானது ஒவ்வொரு ஆண்டும் ஒப்பளிக்கப்பட்ட ஒதுக்கீட்டினை விட அதிகரித்துள்ளது என்பதனை மேலே உள்ள அட்டவணையில் காணலாம். எனினும், முக்கிய துறைகளான மின்சாரம், தொழில் மற்றும் விவசாயத்தின் வளர்ச்சி குறைந்தது, எனினும் சேவைத் துறையில் அதிக வளர்ச்சி அடைந்துள்ளதால் 2007–2012 ஆம் ஆண்டுகளில் மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 8.58 சதவீதத்தை அடைவதற்கு வழியாக அமைந்தது.

### 2.2.2 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012-2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017), பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டினை விட 148 சதவீதம் அதிகரித்து, 2,11,250 கோடி ரூபாய் ஒதுக்கீட்டளவில் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம், விரைவுபடுத்தப்பட்ட, நிலைக்கத்தக்க மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை இத்திட்ட காலத்தில் எய்துவதை உறுதி செய்யும் வகையிலும், மாநில பொருளாதாரத்தின் சராசரியான வருடாந்திர வளர்ச்சி விகிதம் 11 சதவீதத்தை அடைவதற்கான நோக்கமும் கொண்டுள்ளது. இத்திட்டம் “தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023” ல் உள்ள குறிக்கோளை அடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

### 2.2.3 2012-13 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) முதல் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2012–13, 28,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப் பட்டுள்ளது. இறுதியான செலவினம் 28,527.60 கோடி ரூபாய் ஆகும்.

### 2.2.4 2013-14 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் (2012–2017) இரண்டாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் 2013–14, 37,128 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இறுதியான செலவினம் 37,745.52 கோடி ரூபாய் ஆகும்.

### 2.2.5 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம்

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் **(2012–2017)** மூன்றாம் ஆண்டான ஆண்டுத் திட்டம் **2014–15, 50,660** கோடி ரூபாய் [**38,105.27** கோடி ரூபாய் (மாநில திட்டம்) + **12,554.73** கோடி ரூபாய் (மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு)] ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான மத்திய நிதி உதவி பெறும் திட்டங்களில் மத்திய அரசின் நிதி உதவியில் குறைவு இருந்தாலும் கூட திட்டச் செலவினமானது திட்ட ஒதுக்கீட்டைவிட அதிகமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 2.2.6 2015-16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய அரசானது மத்திய திட்டக்குழுவிற்குப் பதிலாக ‘‘நிதி ஆயோக்’’ என்னும் புதிய அமைப்பினைத் தோற்றுவித்துள்ளது. மாநிலங்களின் முதலமைச்சர்களைக் கொண்ட ஆட்சி மன்றக் குழுவின் ஆலோசனைக் கூட்டம் **08.02.2015** அன்று புதுதில்லியில் நடைபெற்றது. **2015–16**ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடானது, புதிய அமைப்பான நிதி ஆயோக்கிடமிருந்து விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் கிடைக்கப் பெற்ற பின்னர் இறுதி செய்யப்படும். **2015–16** வரவு செலவு திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூபாய் **55,100** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.2.7 திட்டப் பணிகள் குறித்து ஆய்வு

ஒவ்வொரு மாதமும் ஆண்டுத் திட்டத்தின் கீழ் திட்டச் செலவினங்கள் தொடர்பான முன்னேற்ற அறிக்கை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் மூலம் சம்பந்தப்பட்ட தலைமைச் செயலக

துறைகளிலிருந்து பெறப்பட்டு, நிதி ஆண்டின் இறுதிக்குள் திட்ட ஒதுக்கீடுகள் யாவும் முழுமையாக பயன்படுத்தப் படுவதை உறுதி செய்யும் பொருட்டு, ஆய்வுக்காக தலைமைச் செயலாளர் அவர்கள் முன் வைக்கப்படுகிறது.

## 2.3 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் பங்கீட்டுக்கொள்ளும் திட்டங்கள்

மத்திய அரசின் முழுமையான அல்லது பகுதி பங்களிப்புடன் மற்றும் மாநில அரசின் சொந்த நிதி பங்களிப்புடன் கூடிய மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள், மாநிலத்தின் பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2014–15ஆம் ஆண்டில் மத்திய அரசு இரண்டு குறிப்பிடத்தக்க மாற்றங்களை செய்துள்ளது. முதலாவதாக, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களின் மத்திய நிதி உதவி தற்பொழுது மாநில திட்ட நிதி உதவியாக கருதப்படவேண்டும். மத்திய அரசின் பங்கினையும் சேர்த்து இத்திட்டங்களுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு மாநில திட்ட ஒதுக்கீட்டின் ஒரு பகுதியாக கருதப்படும். இரண்டாவதாக, மத்திய அரசு, நடைமுறையிலிருக்கும் 142 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை 66 திட்டங்களாக, 2014–15ம் ஆண்டு முதல் மாற்றி அமைத்துள்ளது. மேலும், அந்தந்த மாநிலங்களுக்குப் பொருந்தும் வகையில் வழிகாட்டி நெறிமுறைகளை திருத்தி அமைப்பதற்கு ஏதுவாக, இத்திட்டங்களுக்கான வழிகாட்டி நெறிமுறைகளை ஆய்வு செய்து தேவையான மாற்றங்கள் செய்வது குறித்த ஆலோசனைகளைத் தெரிவிக்கும்படி மாநில அரசிடம் மத்திய அரசு கோரியது. இதன்படி, தமிழக அரசு,

ஒவ்வொரு திட்டங்கள் மீதான விரிவான கருத்தினையும், பரிந்துரைகளையும் மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது. இப்பரிந்துரைகளில், சில மத்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், பல திட்டங்களின் பரிந்துரைகள் மீதான நடவடிக்கைகள் இன்னும் மேற்கொள்ளப்படவேண்டி உள்ளது.

### 2.3.1 2015 – 16ம் ஆண்டு முதல் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான திருத்திய பங்களிப்பு

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் பேரில், மத்திய அரசு, தனது **2015–16**ம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்டத்தில், மத்திய வரி தொகுப்பிலிருந்து **42%** வரி வரவினை மாநிலங்களுக்கு பகிர்ந்தளிப்பதாக குறிப்பிட்டுள்ளது. இந்த தொகையானது, **2014–15**ம் நிதியாண்டில் **13** வது நிதிக்குழுவின் பரிந்துரையான **32%**ஐ காட்டிலும் அதிகமாகும். மாநிலங்களுக்கு, மத்திய வரி வருவாயிலிருந்து பெருமளவு தொகை பகிர்ந்தளிக்கப்படுவதால், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் கூடுதல் நிதி உதவி திட்டங்களுக்கான பங்களிப்பினை, மாற்றியமைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இதன் காரணமாக, மத்திய அரசு, தனது **2015–16**ம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில், சில மத்திய நிதிஉதவி பெறும் திட்டங்களை மத்திய அரசின் முழுமையான பங்களிப்புடன் தொடர்ந்து செயல்படுத்தவும், குறிப்பிட்ட சில மத்திய நிதி உதவி பெறும் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்ட பங்களிப்பு விகிதங்களுடன் செயல்படுத்தவும், **8** மத்திய நிதி உதவிபெறும் திட்டங்களுக்கான மத்திய அரசின் நிதி உதவியினை

முழுவதும் நிறுத்தவும் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. தனித்தனி மத்திய அரசின் நிதி உதவிபெறும் திட்டங்களுக்கான பங்களிப்பு முறை மீதான தெளிவான இறுதி முடிவு இதுவரை பெறப்படவில்லை. மேலும், 14வது நிதிக் குழுவின் பரிந்துரையின் விளைவாக, கிடைக்கப்பெறும் கூடுதல் நிதி ஆதாரங்களிலிருந்து இந்த திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவது குறித்து மாநில அரசு முடிவு எடுக்கலாம் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தமிழகத்தை பொறுத்தவரை, 14வது நிதிக்குழுவின் பரிந்துரையின் விளைவாக எந்த ஒரு கூடுதல் நிதியும் மாநில அரசுக்கு கிடைக்கவில்லை. மத்திய அரசின் வரி வருவாயிலிருந்து அனைத்து மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் பங்கு அதிகரித்த போதிலும் அனைத்து இனங்களிலும் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு வழங்கப்படும் நிதி அதிகரிக்காது. 14வது நிதி குழுவின் அறிக்கையின்படியே 2011–12ம் நிதியாண்டில் மாநிலங்களுக்கான மொத்த நிதி பரிமாற்றம் 53.4 சதவீதமாகும். ஆனால் 2015–16ம் நிதியாண்டில் இது 49.4 சதவீதமாகவே தான் இருக்கும். மேலும், மிக முக்கியமாக, தமிழகத்தைப் பொறுத்தவரை மத்திய வரித் தொகுப்பிலிருந்து பகிர்ந்தளிக்கப்படும் வரியானது 4.969 சதவீதத்திலிருந்து 4.023 சதவீதமாக குறைந்துள்ளது. இது 19.14 சதவீதம் சரிவைக் காட்டுகிறது. மேலும், வருவாய் பற்றாக்குறை மானியங்கள் பெற தகுதியிருந்தும் தமிழகத்திற்கு சிறப்பு மானியங்கள் எதுவும் மத்திய அரசால் வழங்கப்பெறவில்லை. எனவே, மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் சில முக்கிய துறைகளில் நீக்கப்பட்ட திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தவும், சில குறிப்பிட்ட திட்டங்களில்

குறைக்கப்பட்ட மத்திய நிதியுதவியை ஈடு செய்ய மாநில அரசால் கூடுதல் நிதி வழங்குவதற்காகவும், தமிழ்நாடு அரசால் கணிசமான கூடுதல் முயற்சியை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

### 2.3.2 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களை மாற்றியமைத்தல்

இது தொடர்பாக, புதுடில்லியில் **8.2.2015** அன்று நிகழ்ந்த நிதி ஆயோக்கின் (NITI Aayog) ஆட்சி மன்றக் கூட்டத்தில், திருத்தியமைக்கப்பட்ட மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீட்டிற்கான அளவுகோல் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து கீழ்காணும் விரிவான கருத்துரைகளை மாநில அரசு முன்வைத்துள்ளது.

i. மாநிலங்களுக்கிடையிலான செயல்திறன் வேறுபாடுகள் மற்றும் வேறுபட்ட தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் முதன்மை திட்டங்களின் வடிவமைப்பில் போதுமான நெகிழ்வுதன்மை இருக்க வேண்டும். திட்ட வடிவமைப்பு, உள்ளூர் தேவைகளின் அடிப்படையிலான திட்டங்களை மாநிலங்கள் செயல்படுத்துவதற்காக, அதிக அளவிலான நெகிழ்வுத்தன்மையினை அனுமதிக்கும் விரிந்த துறைவாரியான நிதி ஒதுக்கீடுகளை அளிப்பதாக இருக்க வேண்டும்.

ii. மத்திய நிதி உதவியின் மாநிலவாரியான ஒதுக்கீட்டிற்கு அடிப்படையாகக் கொள்ளப்படும் வரன் முறை, மிகச்சிறந்த நடுநிலைத் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும். அது,

அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக ஏற்கனவே தங்கள் சொந்த நிதியாதாரங்களை முதலீடு செய்து குறிப்பிடத்தக்க அளவுக்கான வளர்ச்சி பெற்ற மாநிலங்களை தண்டிப்பதாக அமையக்கூடாது.

iii. சிறந்த முறையில் திட்டமிடுவதற்கும், திட்டங்களை செயல்படுத்துவதற்கும்,குறிப்பிட்ட ஆண்டிற்கான ஒதுக்கீட்டு அளவுகள் குறித்து தெளிவான, முன்னரே கணிக்கத்தக்க மற்றும் நிச்சயத்தன்மை உடைய நிதி ஒதுக்கீட்டிற்கான வரன்முறைகள் அமைய வேண்டும். மேலும், வருடாந்திர ஒதுக்கீடு குறித்த தகவல்கள் போதுமான கால அளவுக்கு முன்னரே தெரிவிக்கப்படவேண்டும்.

iv. **மாநிலங்களின் சொந்த முன்னுரிமைச் செலவினங்களுக்குப் பாதகம் ஏற்படாத வகையில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டச் செலவுகளில் மாநிலங்களின் பங்கு அதிக பட்சம் 25 சதவீதம் என்ற அளவுக்குள் அமையுமாறு வரையறுக்கப்படவேண்டும்**

v. மத்திய அரசின் திட்டத்தினைப் போன்றதொரு திட்டம், மாநில அளவில் ஏற்கனவே நடைமுறையிலிருந்தால் மத்திய திட்ட நிதியினை மாநிலத் திட்ட நிதியோடு இணைத்துக் கொள்ள அனுமதிப்பதற்கு ஏற்றவாறு வழிகாட்டு நெறிமுறைகள் அமைய வேண்டும்.

vi. உறுதியளிக்கப்பட்ட ஒதுக்கீடு, எவ்வித இடைக்காலக் குறைவுகளுமின்றி முழுமையாக அளிக்கப்படவேண்டும். மத்திய அரசின் பங்கு,

ஒரு ஆண்டில் இரண்டு தவணைகளுக்கு மேற்படாத வகையில் அளிக்கப்பட வேண்டும். முந்தைய ஆண்டுகளின் விடுபட்ட நிதி, நடப்பு ஆண்டு நிதியினை வழங்குவதற்கு முன்பாகவே அளிக்கப்பட்டு விடவேண்டும்.

vii. நிதி வழங்குவதற்கான வரையறைகளில், விலைவாசி ஏற்றத்திற்கு ஏற்ப குறியீடுகள் பயன்படுத்தப்படும் முறை நடைமுறைப்படுத்தப் பட்டு, அதன் பயனாக வழங்கப்படும் நிதியின் அளவு தன்னியல்பாகவே (automatic) உயர்த்தப்பட வழிவகை செய்ய வேண்டும்.

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களில் உள்ள பிரச்சனைகள் குறித்து ஆய்வு செய்ய நிதி ஆயோக் என்ற அதிகாரக்குழுவின் கீழ் ஒரு துணைக்குழு உள்ளது. இக்குழுவின் அறிக்கை இனிமேல்தான் சமர்ப்பிக்கப்பட்டு வெளியிடப்பட உள்ளது. எனினும், இதற்கிடையில் பல்வேறு மத்திய அமைச்சகங்கள் தங்களின் கீழ் செயல்படுத்தப்படும் மத்திய திட்டங்களை தயார்செய்வதில் முனைந்துள்ளது. அதில் பல்வேறு திட்டங்களில் மாநில அரசின் பங்களிப்பு அதிகமாக உள்ளது.

## 2.4 இருபது அம்சத் திட்டம் 2006–ன் ஆய்வு

இருபது அம்சத்திட்டமானது வறுமை ஒழிப்புக்கான தொகுப்பு திட்ட நடவடிக்கையாக, 1975ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1982, 1986 மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டு 2006ஆம் ஆண்டில் ‘‘இருபதுஅம்சத்திட்டம் 2006‘‘ எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

வறுமை ஒழிப்பு, ஏழைகள் மற்றும் கீழ்மட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவது ஆகியன இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். இத்திட்டம் வறுமையினை குறைத்தல், வேலை வாய்ப்பினை பெருக்குதல், கல்வி, வீட்டு வசதி, சுகாதாரம், வேளாண்மை, நிலச் சீர்திருத்தம், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் அவர்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற குறிப்பிடப்பட்ட அம்சங்களை கொண்டதாகும்.

இருபது அம்சத் திட்டம்–2006 குறித்த மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் / நிறுவனங்களின் பல்வேறு இனவாரியான செயல்பாடுகள் குறித்த ஆய்வு அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அவ்வப்போது நடைபெற்று வருகிறது. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட இனங்களின் (Monitorable Items) செயல்பாடுகள் குறித்து ஒவ்வொரு காலாண்டும் இத்துறையினால் ஆய்வு அறிக்கை தயாரிக்கப்பட்டு மத்திய புள்ளி இயல் மற்றும் திட்டசெயலாக்க அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது.

## 2.5 பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்களை கண்காணித்து ஆய்வு செய்தல்

100 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்ட மதிப்பீட்டிலான பெரிய உள் கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றத்தை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட உயர்மட்ட அலுவல் குழு ஆய்வு செய்து கண்காணிக்கிறது.

இந்நோக்கத்திற்காக பெரிய உள்கட்டமைப்புத் திட்டங்கள் பின்வரும் துறைகளில் வகைப்படுத்தப்பட்டுள்ளது:

i. எரிசக்தி,
ii. தொழில் மற்றும் தகவல் தொழில் நுட்பம்,
iii. நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள்,
iv. சென்னை பெருநகருக்கான உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும்
v. இதர நகர உள்கட்டமைப்புத் திட்டங்கள் மற்றும் குடிநீர் திட்டங்கள்.

உயர்மட்ட அலுவல் குழு மேற்கண்ட திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்து, நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவுக்குள் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள முட்டுக் கட்டைகளைக் கண்டறிந்து, துறைகளுக்கிடையே தேவைப்படும் ஒத்துழைப்பு உட்பட இது போன்ற பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகளை வழங்குகிறது.

## 2.6 மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள முக்கிய கருத்துருக்களுக்கு தீர்வு செய்தல்

மத்திய அரசு, அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கிடையே நிலுவையிலுள்ள மாநிலங்களின் கருத்துருக்களை விரைவாகத் தீர்வு செய்வதற்காக, “இ–சமிக்ஷா” என்ற வலைத்தளத்தை ஏற்படுத்தி உள்ளது. மத்திய அரசிடம் நிலுவையிலுள்ள முக்கிய கருத்துருக்கள் மேற்கண்ட வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப் படுகின்றது. அந்தக் கருத்துருக்களின் தற்போதைய நிலை மத்திய மற்றும் மாநில அரசுகளால் காலமுறை

அடிப்படையில் பதிவு செய்யப்பட்டு தீர்வு காணப்படுகின்றது. தமிழகத்தில் தற்போது நிலுவையிலுள்ள 139 கருத்துக்களை இந்த ‘இ–சமிக்ஷா’ வலைதளத்தில் தீர்வுக்காக பதிவு ஏற்றம் செய்யப்பட்டுள்ளது.

## 2.7 மாநிலத்தில் செயல்படுத்தப்படும் முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்களை ஆய்வு செய்தல்

மாநிலத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய பெரும் முதலீட்டிலான உள்கட்டமைப்புத் திட்டங்களில் ஏற்படும் நடைமுறைச் சிக்கல்களை தீர்வு செய்வதற்காக “மத்திய அமைச்சரவையின் திட்ட முதலீட்டுக் குழு – திட்டக் கண்காணிப்புக் குழு” என்ற அமைப்பினை மத்திய அரசு, செயல்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்வதற்கும், அத்திட்டங்களில் ஏற்படும் நடைமுறைத் தடைகளை தீர்ப்பதற்கும் மாநில அளவில் தலைமைச் செயலாளரின் தலைமையில், திட்டங்கள் தொடர்புடைய மத்திய மற்றும் மாநில அரசுகளின் அதிகாரிகள் மற்றும் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அலுவலர்களுடனும் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

## 2.8 புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு

புவியியல் தகவல் அமைப்பு மற்றும் தொலையுணர்வு செயல்பாடுகளை அனைத்து அரசுதுறைகளிலும் ஒருங்கிணைத்து சீரிய முறையில் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.19 திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை நாள் 15.02.1984 –ன்படி மாநில அளவிலான ஒருங்கிணைப்பு குழு உருவாக்கப்பட்டது. இதனை தொடர்ந்து, 2009ஆம் ஆண்டு தகவல்

தொழில்நுட்ப துறை மாநிலத்தில் புவியியல் தகவல்அமைப்பு மற்றும் தொலையுணர்வு முறையை செயல்படுத்தும் முனைப்பு துறையாக அமைக்கப்பட்டது. அனைத்து தொலையுணர்வு விவரங்கள் மற்றும் அடிப்படை பகுப்பாய்வு வரைபடங்களை பராமரிக்கும் பணிகளை தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மின்–ஆளுமை (TNeGA) முகமையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து துறைகளுக்கும் தேவையான விவரங்கள் மற்றும் வரைபடங்களும் மத்திய விவர தொகுப்பிலிருந்து பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட மாநில ஒருங்கிணைப்பு குழு புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு பணியினை ஆய்வு செய்து வருகிறது. முதன்மை செயலாளர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் முதன்மை செயலாளர், தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியோரின் கூட்டுத் தலைமையின் கீழ் ஒருங்கிணைப்பு குழு அமைக்கப்பட்டு பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து, புவியியல் தகவல் அமைப்பு / தொலையுணர்வு திட்டங்களுக்கான கருத்துருக்கள் மீது முடிவுகள் மேற்கொள்ளுவதை மேற்பார்வையிட்டு வருகிறது. தமிழகத்தின் புவியியல் தகவல் அமைப்புக்கான பூகோள வரைபடத்தின் அடிப்படை அலகுகளை ஒத்திசைவு செய்து நிலைப்படுத்தவும், அந்த வரைபடத்தின் பல்வேறு துறைகளில் தற்போது நடைமுறையில் உள்ள பலதரப்பட்ட அலகுகளை ஒன்றிணைக்கவும் இக்குழு முழு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

## 2.9 புள்ளிவிவர தகவல் சேகரிப்பு, தொகுப்பு மற்றும் பரப்புதல்

இத்துறை மாநிலம் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் மற்றும் அதன் பொருளாதாரம் ஆகியவைகளை வழங்குவதில் ஓர் ஒருங்கிணைப்பு மையமாக உள்ளது. அத்தகைய விவரங்கள் அரசுத் துறைகளில் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்களிலிருந்தும், தனியார் துறைகள் உட்பட சேகரித்து தொகுக்கப்படுகின்றன.

துறைகளுக்குத் தேவைப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களும் இத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையின் மூலமாக பெறப்படுகின்றன. இத்துடன் நாட்டின் ஏனைய மாநிலங்களின் புள்ளி விவரங்களை, நமது மாநிலத்தின் தொடர்புடைய செயல்பாடுகளின் புள்ளி விவரங்களோடு ஒப்பு நோக்குவதற்கும் இத்துறை தகவல்களைச் சேகரிக்கிறது.

## 2.10 பெருந் திட்டங்கள் மற்றும் பணிகளை மதிப்பீடு செய்தல்

பல்வேறு அரசுத் துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்து அத்திட்டங்களின் பயன்கள் உண்மையான பயனாளிகளுக்கு சென்றடைந்ததை உறுதி செய்வது இத்துறையின் முக்கியமான பணியாகும். மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குநரகம் மூலம் திட்டங்களின் செயல்பாடுகளை உடனுக்குடனும், திட்டங்கள் முடிக்கப்பட்ட பின்னரும் மதிப்பீடு செய்யப்படுகிறது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மை செயலாளர்

தலைமையில் இயங்கும் குழுவின் ஒப்புதலைப் பெற்று மதிப்பீடு செய்யும் பணி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகத்தால் மேற்கொள்ளப்படுகிறது. மதிப்பீடு செய்யப்பட வேண்டிய திட்டங்களை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி இயக்குனரகம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தொடர்புடைய துறைகளுடன் கலந்து செயல்முறை மற்றும் ஆராய வேண்டிய வழிமுறைகளை இறுதி செய்கிறது. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ஆலோசகர்களின் ஆலோசனைகளைப் பெறுவதற்கும்; ஆராய்ச்சி உதவியாளர்களை பணியமர்த்திக் கொள்ளவும்; மதிப்பார்ந்த நிறுவனங்கள் மூலம் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில திட்டக்குழுவின் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கும் அறிவுரைக் குழுவிற்கு மதிப்பீடு வரைவு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும். இம்மதிப்பீடுகளின் வெளியீடுகள் களப்பணி விவர சேகரிப்புகளின் முடிவுகள் முறையான பகுப்பாய்வு மற்றும் திட்டங்களை செயல்படுத்தும் துறைகள் திட்டங்களை இடையிடையே சரிசெய்வதற்கும் கொள்கைகளை மாற்றுவதற்கும் ஆலோசனை வழங்கவும் ஆவணங்களாக வெளியிடப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கைகள் www.tn.gov.in/dear/index.htm என்ற அரசின் இணைய தளத்திலும் வெளியிடப்படுகின்றன.

### 2.11 ஆதாரம் அடிப்படையில் கொள்கை வகுப்பது

மாண்புமிகு முதலமைச்சர், **8.8.2014** அன்று, சட்டமன்ற பேரவையில் விதி **110**–இன் கீழ் முனைப்பான நிருவாகத்திற்கு ஆதாரம் அடிப்படையில் கொள்கை

வகுப்பது ஒரு முக்கியமான திட்டக்கூறு என தெரிவித்து அறிவிப்பு செய்தார். அரசை சேர்ந்த வெவ்வேறு துறைகளின் ஓர் ஆலோசனைத் துறை என்ற முறையிலும் மாநில திட்டக்குழு, பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை ஆகியவற்றின் நிருவாகத் துறை என்ற வகையிலும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தயாரிப்பை மேம்படுத்துவதற்கு, அரசு மேற்கொள்கிற சிறப்பு நடவடிக்கைகளுக்கு செயல்வடிவம் அளிப்பதை, தனிச் சிறப்பான முறையில் உறுதி செய்கிறது. கடந்த காலத்தில், அரசின், ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கைத் தயாரிப்பை மேற்படுத்துவதற்கு, இத்துறை, பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

நடைபெற்று வரும் திட்டங்களையும், திட்டப் பணிகளையும் முறையாகக் கண்காணிப்பதும், மதிப்பீடு செய்வதும், ஆதாரத்தை அடிப்படையாகக் கொண்ட கொள்கை தயாரிப்புக் கட்டமைப்புப் பணியில் ஒரு முக்கியமான அம்சமாக உள்ளது. எனவே, இந்த அரசானது, நடந்தேறி வருகின்ற திட்டங்கள் மற்றும் திட்டப் பணிகள் முறையாக கண்காணிக்கப்பட்டு மதிப்பீடு செய்யப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும். பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளின் பயன்களை பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற அதிகளவிலான செயல்விளைவு மதிப்பீட்டு ஆய்வுகளுடன், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை வலுப்படுத்தப்பட்டு வருகிறது. அப்போதுதான் இடைக்கால திருத்தங்களை மேற்கொள்வதற்கும், இனிவரும் காலங்களில் சிறப்பான மற்றும் மிகவும்

பயனுடைய திட்டங்களை வகுப்பதற்கும் அதிலிருந்து பெற்ற படிப்பினையை பயன்படுத்த இயலும்.

### 2.11.1 தெற்கு ஆசியா, மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம், அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம்

யு.எஸ்.ஏ. மசாசூசெட்ஸ் தொழில்நுட்ப நிறுவனம் (Massachussets Institute of Technology, USA) அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு (Abdul Latif Jameel – Poverty Action Lab (J-PAL)) என்பது, மிகவும் குறைந்த செலவிலும், செம்மையான முறையிலும், வறுமையைக் குறைக்கிற பல்வேறு கொள்கை முயற்சிகளின் உருவாக்கம் மற்றும் மதிப்பீடு குறித்து முனைப்பான ஆராய்ச்சியை செய்து வருகிற உலகம் முழுவதிலுமுள்ள வெவ்வேறு பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களைச் சேர்ந்த சில சிறந்த மேம்பாட்டு பொருளாதார வல்லுநர்களையும், சமூக அறிவியலாளர்களையும் கொண்ட ஓர் கட்டமைப்பாகும்.

**08.08.2014** அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி **110**–இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.2(ம)ம) துறையின் **02.09.2014**ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்.**81**–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணையில் அறிவிக்கப்பட்டுள்ளபடி ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களில் கிடைத்த பயன்களை ஆராய்ந்து வறுமை ஒழிப்புத் திட்டங்களில் அதிக பயனை அடையும் வகையில் கொள்கைகளை வகுப்பதற்காக அரசானது, தெற்கு

ஆசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் – வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்புடன் (Abdul Latif Jameel – Poverty Action Lab (J-PAL)) **19.11.2014** அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கியத் திட்டக் கூறுகள் வருமாறு:

(i) **கொள்கைக் குறித்த பேச்சு வார்த்தை**

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பும், தமிழ்நாடு அரசும் தமிழ்நாடு அரசின் தலைசிறந்த கொள்கை முன்னுரிமைகளைக் கண்டறிந்து பின்வருவன பற்றி கலந்துரையாடல்களை மேற்கொள்ளும்.

(i) மாநில அளவில், படிப்படியான அளவு வீதத்தில் பெரிதாக்கி காட்டுவதற்கு முன், களப்பணி பரிசோதனைக்கு முனைப்புடன் உட்படுத்தப்படும், புதுமையான வளவாய்ப்புத் தீர்வுகளைக் கூட்டாகக் கண்டறிதல்.

(ii) இந்தியாவின் மற்றபகுதியிலும் உலகளவிலும் பரிசோதிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் செயல்படுத்தக்கூடிய கொள்கை புதுமைகளைக் கண்டறிதல். **2014–15**ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

**(ii) மதிப்பீட்டுத் திட்டங்கள்**

சாத்தியக் கூறினை அளவீடு செய்வதற்கு முன்னர், மதிப்பீடு செய்யப்பட வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகளைத் தெரிவு செய்தல்.

**(iii) திறன் மேம்பாடு**

பின்வரும் நடவடிக்கைகள் வாயிலாக நடந்தேறி வருகிற அல்லது புதிய திட்டங்களை கண்காணித்து மதிப்பீடு (Monitoring & Evaluation) செய்யும் பணியை மேற்கொள்வதற்கு, உள்ளார்ந்த திறன் மேம்படுத்துதலில், தமிழ்நாடு அரசுக்கு, தெற்கு ஆசியாவின் அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவும்.

**(அ) கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டுத் தேவைகளை அறுதியிடல்**

தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, நடைமுறையிலுள்ள கண்காணித்தல் மற்றும் மதிப்பீட்டு தகவல் ஆதாரங்கள், கண்காணித்தலில் அவற்றில் பயன்பாடு, முடிவுகளை/விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை தொடர்பான வேறுபாடுகள் ஆகியவற்றை கண்டறிவதற்கு, மதிப்பீடு தேவைகளை கண்டறியும் பயிற்சி முறை ஒன்றை நடத்தும். இந்த பயிற்சி முறையானது, தொடக்கத்தில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தெரிவு செய்யப்பட்ட 3 செயல்படுத்தும்

துறைகளுடன் மேற்கொள்ளப்படும். தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில், பரிந்துரைகள் மற்றும் திறன் மேம்பாடு பற்றிய அடுத்த கட்ட நடவடிக்கைகளுடன் கூடிய விரிவான செயற்குறிப்பு ஒன்று அளிக்கப்படும்.

## (ஆ) மதிப்பீட்டு வழிகாட்டி குறிப்புகள்

தேவைகள் மதிப்பீட்டின் அடிப்படையில், மதிப்பீடுகளை தொடங்கி நிருவகிப்பது குறித்த வழிகாட்டி குறிப்புகளை உருவாக்குவதற்கு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு தொழில்நுட்ப நிதியுதவிக்கு தெற்காசியாவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு வகைசெய்யும்.

## (இ) திறன் மேம்பாட்டு பயிலரங்குகள்

தெற்காசியவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பானது, தொடர்புடைய கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு தலைப்புகள் பற்றி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கும், தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகளுக்கும் செயல்முறை பயிற்சி வகைசெய்யும்.

## (ஈ) கண்காணிப்பு ஏற்பாட்டு முறைகளுக்கு தொழில்நுட்ப நிதியுதவி

செயல் விளைவு அடிப்படையிலான கண்காணிப்பு கட்டமைப்புகளை பின்பற்றுவதற்கும், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் தேர்வு செய்யப்பட்ட செயல்படுத்தும் துறைகள்,

முனைப்புடன் கண்காணித்து முடிவு எடுப்பதற்கான ஏற்பாட்டு முறைகளை வலுப்படுத்துவதற்கும், தமிழ்நாடு அரசிற்கு தெற்காசியவிலுள்ள அப்துல் லத்தீப் ஜமீல் வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பு உதவிசெய்யும்.

17.09.2014 அன்று தலைமைச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற முதலாம் நெறிப்படுத்துதல் குழு ஒப்புதலின் அடிப்படையில் அப்துல் லத்தீப் ஜமீல்–வறுமை குறித்த செயல் ஆராய்ச்சி ஆய்வக அமைப்பின் (Abdul Latif Jameel – Poverty Action Lab (J-PAL)) மூலமாக ஐந்து முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்வதற்கு செயல்பாட்டுத் துறைகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டன. அதுபற்றிய விவரம் வருமாறு :

I. சிசு இறப்பு வீதத்தை குறைக்கிற வகையில் தமிழ்நாட்டில் தாய்ப்பால் கொடுப்பதால் ஏற்படும் பயன்களைப் பற்றி பெண்களுக்கு ஆலோசனை வழங்கும் செயற்குறிப்பிற்கு ரூ.18,31,020/–க்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.
II. வளரிளம் பருவத்தில் மாணவ, மாணவிகளுக்கு இரத்த சோகை ஏற்படுகிற பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காகவும், வாரந்தோறும் இரும்புச் சத்து செறிவூட்டப்பட்ட மாத்திரைகளை எடுத்துக்கொள்வதால் ஏற்படுகிற பயன்களை எடுத்துரைப்பதற்காக ரூ.26,12,448/–க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.
III. வருங்காலங்களில் தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் போன்ற

நோய்களினால் ஏற்படுகின்ற பொருளாதாரச் சுமையைக் குறைக்கும் வகையில் இதுபோன்ற தொற்று அல்லாத நோய்களின் பாதிப்பைக் குறைப்பதற்கு ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை கற்பிக்கும் செயற்குறிப்பிற்கு ரூ.2,21,86,483/–க்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

IV. கல்வியின் உயர்ந்த பயன்களை அடைவதற்காக, முன்னோடி நடவடிக்கைகள் குறித்து கருத்து தெரிவிப்பதற்கு தமிழ்நாடு அரசுக்கு உதவுவதற்காக வேலூர், திருவண்ணாமலை மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வடமாவட்டங்களில் தொடக்கப்பள்ளி கல்வி நடைமுறை குறித்து மதிப்பீடு செய்வதற்கான செயற்குறிப்பிற்கு ரூ.41,89,845/–க்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

V. வேலையின்மை மற்றும் தகுதி குறைந்த வேலைவாய்ப்பு ஆகிய முதன்மை சவால்களை களைவதற்காக, திறன் வளர்ப்பின் மூலம் இளந் தொழிலாளர் சந்தையின் பயன்களை அதிகரித்தல் என்னும் செயற்குறிப்பிற்கு ரூ.29,72,475/–க்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது.

## 2.11.2 தரவு ஆய்வு

பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமையுடன் இணைந்து, தரவு ஆய்வு அலகு (Data Analytics Unit) உருவாக்கப்படும். அரசிடம் குவிந்துள்ள புள்ளி விவரங்கள் நிகழ்கால அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு, மக்களுக்கு சேவைகளை சிறப்பாக கொண்டு செல்லும் நோக்குடன் அரசின் கொள்கைகளை அவ்வப்போது

மேம்படுத்துவதற்கான வாய்ப்பு இதன் மூலமாக ஏற்படும். இத்தகைய அலகை ஏற்படுத்தும் முதல் மாநிலம் தமிழ்நாடு என்பது குறிப்பிடத்தக்கது. இது ஆதாரங்களின் அடிப்படையில் கொள்கை வகுப்பதற்கு முக்கிய காரணியாக அமைகிறது.

### 2.11.3 கல்வி நிறுவனங்களுடன் அதிகளவில் ஒருங்கிணைந்து செயலாற்றுதல்

கொள்கை தயாரிப்பு குறித்த ஆலோசனையைப் பெறுவதற்காக, சமூக அறிவியலாளர்கள் மற்றும் பிற வல்லுநர்களின் சிறப்பறிவுத் திறனை பயன்படுத்துகிற ஓர் முயற்சியாக, வெவ்வேறு கருத்துக்களை கேட்டறிந்து, அவற்றை கொள்கை தயாரிப்புக்கான முயற்சிகளில் சேர்க்கிற வகையில், வெவ்வேறு கருத்தரங்குகள் மற்றும் குழுக்கூட்டங்களில், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம், இந்திய புள்ளியியல் நிறுவனம், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை, அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பொருளியல் கல்வி நிறுவனம் மற்றும் IFMR போன்ற நிறுவனங்களைச் சேர்ந்த வல்லுநர்களின் பங்கேற்பை துறை ஊக்குவிக்கிறது.

## 2.12 சிறப்புத் திட்டங்கள், திட்டப் பணிகளைச் செயல்படுத்துதல்

**1975–**ம் ஆண்டு முதல், தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களிடையே பெரிய வனப்பகுதிகளை எல்லைகளாகக் கொண்டும் மேலும் வடக்கு வரை நீண்டு செல்லும் மலைப்பாங்கான மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒப்பற்ற உயிரினச் சூழல்களை பாதுகாக்கும் நோக்கத்தோடு, செயல்படுத்தப்பட்ட இரண்டு மத்திய

நிதியுதவி பெறும் திட்டங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை செயல்படுத்தி வந்தது. நீலகிரி மாவட்டத்தை மையமாகக் கொண்டும் கேரளா மற்றும் கர்நாடகா மாநிலங்களை எல்லைகளாகக் கொண்டும் தனியாக செயல்படுத்தப்படும் திட்டம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று அழைக்கப்படுகிறது. நீலகிரி மலைப்பகுதியின் தென்பகுதியில் உள்ள ஏனைய மலைத்தொடர்கள் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழும் கொண்டுவரப்பட்டு உள்ளது. இவ்விரு திட்டங்களுக்கு பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டகாலம் முழுவதற்கும் முதலீட்டினை கணிசமான அளவு உயர்த்தி மேலும் தொடர மத்திய அரசினை மாநில அரசானது வலியுறுத்தியது. எனினும், மத்திய அரசானது இத்திட்டங்களை 2015–16 ஆம் நிதியாண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கிவிட்டது. எனவே, மாநில அரசானது இந்த இடர்பாட்டிலிருந்து மீளும் முயற்சியாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்காக ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

## 2.12.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், நீலகிரி மாவட்டத்தில் 1975ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக்குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது. மலைப்பகுதியின் உயிரினப் பன்மயத்தினை பேணுதல், பாதுகாத்தல் மற்றும் வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிகளுக்கு உறுதுணை அளிக்கும் நோக்கத்தோடு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வந்தது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், இயற்கைச் சூழலைப் பேணுவதும், இயற்கைச் சூழலை

மீளச்செய்வதும் ஆகும். ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இதற்கென, நீலகிரி மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப்பகுதிகளாக பகுக்கப்பட்டு உள்ளது. இவற்றில், 37 முன்னுரிமை நீர்வடிப்பகுதிகள் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக படிப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டன. வடிகால்களை சீர்செய்தல் மற்றும் விவசாயத்திற்கு உகந்த நிலத்தில் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்ற வேளாண் உற்பத்தி முறைகளைக் கையாண்டு மழை நீரை சேமிப்பதன் மூலமாக குறு நீர்வடிப்பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

### 2.12.1.1 2014–15ஆம் ஆண்டின் செயல்பாடு

2014–15ஆம் ஆண்டிற்கான மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூபாய் 47.34 கோடியாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள் வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், மண்வளப் பாதுகாப்பு, காடுவளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகள் மேம்பாடு, சிறுபாசனம், சாலைகள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளின் வளர்ச்சிப் பணிகளுக்காக பெரும்பாலான தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.12.1.2 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய வரவு செலவு திட்டம் 2015–16ல், மத்திய அரசானது மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், 2015–16 ஆம் ஆண்டு முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படுகிறது என்றும், அத்திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரங்களில் இருந்து தொடர்ந்து செயல்படுத்தலாம்

என்றும் அறிவுறுத்தியுள்ளது. **வரவு செலவு திட்டம் 2015–16ல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப் பகுதிகளைச் சேர்த்து ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீட்டில் புதிதாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

**2.12.2 மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் 1975–76ல் தொடங்கப்பட்டு மத்திய அரசின் திட்டக்குழு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வந்தது (90 சதவிகிதம் மானியம் மற்றும் 10 சதவிகிதம் கடன்). ஆண்டுத்திட்டம் 2009–2010 முதல் 90 சதவிகிதம் மத்திய அரசின் மானியமாகவும் 10 சதவிகிதம் மாநில அரசின் பங்காகவும் மாற்றப்பட்டுள்ளது.

மேற்குத் தொடர்ச்சி மலை பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது, 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட 60 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த 8 மாவட்டங்களில் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இத்திட்டம் முழுமையாகவும் மீதமுள்ள மாவட்டங்களில் பகுதியாகவும் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் 2010–11ஆம் ஆண்டில் மதுரை, திண்டுக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை

(TAWDEVA) யிடம் செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது. 2012-13 ஆம் ஆண்டில் கூடுதலாக விருதுநகர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இரண்டு மாவட்டங்களில் இத்திட்டத்தினைச் செயல்படுத்த இந்த முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. **2013–14** ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்தினை செயல்படுத்த கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் கன்னியாகுமரி ஆகிய மீதமுள்ள மூன்று மாவட்டங்களிலும் இந்த முகமையின் மூலமாக செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது.

**இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:–**

i. உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையை பேணுதல்.

ii. இப்பகுதியில் அபரிமிதமாக காணப்படும் மாறுபட்ட மரபணு உயிரினங்களை பாதுகாத்தல்.

iii. மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்படுகின்ற சீரழிவுகளை சரி செய்தல்,

iv. அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச் சூழல் சீர்கேட்டினால் ஏற்படும் அபாயம் பற்றி புரியவைத்து சுற்றுச் சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களை தீவிரமாக பங்கு கொள்ளச் செய்தல்.

இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு, வனம், தோட்டக்கலை, விவசாயம், ஆதி திராவிடர் நலன், பழங்குடியினர் நலன், கால்நடை பராமரிப்பு, வேளாண்மை விற்பனை மற்றம் வேளாண் வணிகம், பேரூராட்சிகள் மற்றும் ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளில் திட்டப்பணிகள்

செயல்படுத்தப்படுகின்றன. 2014–15 ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்காக 77 நீர்வரத்துப் பகுதிகள் கண்டறியப்பட்டு இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

### 2.12.2.1 2014–15 ஆம் ஆண்டுத் திட்டம்

2014–15 ஆம் ஆண்டுத்திட்டத்திற்கு மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசின் திட்டக்குழு ரூ.22.84 கோடிக்கு ஒப்புதல் அளித்திருந்தது. இதற்கான திட்டப்பணிகள், தமிழ்நாடு நீர்வடிப் பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக தொடர்புடைய துறைகளால் செயல்படுத்தப்பட்டு தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

### 2.12.2.2 2015–16 ஆம் ஆண்டுத் திட்டம்

மத்திய வரவு செலவு திட்டம் 2015–16ல், மத்திய அரசானது மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் 2015–16 முதல் மத்திய நிதியுதவியிலிருந்து நீக்கப்படுகிறது என்றும், அத்திட்டத்தை மாநில அரசின் நிதி ஆதாரங்களிலிருந்து செயல்படுத்திட அறிவித்து உள்ளது. **வரவு செலவு திட்டம் 2015–16ல், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டங்களின் திட்டப் பகுதிகளைச் சேர்த்து ரூபாய் 75.00 கோடி ஒதுக்கீட்டில் புதிதாக சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டத்தினை மாநில அரசு அறிவித்துள்ளது. இப்புதிய திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.**

### 2.12.2.3 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்கு திட்டங்களைச் செயல்படுத்துதல்

தமிழகத்தின் எல்லையோர மலைப்பகுதிகளில் அண்டை மாநிலங்களிலிருந்து மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்கு பழங்குடியினர் உள்ளிட்ட மக்களுக்கு நலத்திட்டங்களை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களைச் செயல்படுத்த திண்டுக்கல், தேனி, மதுரை மற்றும் நீலகிரி மாவட்டங்களில் 2013-14ல் சிறப்பு ஒரு முறை மானியமாக ரூபாய்.4.00 கோடி வழங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

### 2.12.2.4 மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆய்வு செய்தல்

நீலகிரி மாவட்டத்தில் மாவோயிஸ்ட் தாக்கம் பரவாமல் தடுப்பதற்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்வதற்குத் தேவையான கூட்டங்கள் மாநில அரசால் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன.

### 2.13 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்

திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின், 29.04.2003 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண்:31–இல் சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களை, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் ஒருபகுதியாக இணைத்து துறையினை விரிவாக்க அரசு முடிவெடுத்தது. வெவ்வேறு துறைகளிலிருந்து உருவாகி அரசின் முன்னுரிமையைப் பெறும் புத்தாக்கத் திட்டங்களைப் பற்றி ஆய்வு செய்வது இத்துறையின் நோக்கமாகும். சம்பந்தப்பட்ட நிருவாக துறைகளுடன் ஒருங்கிணைந்து

செயல்பட அதிக எண்ணிக்கையிலான திட்டங்கள் கண்டறியப்பட்டது.

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின், 02.11.2006ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 146–இல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருண்மை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் "ஒருங்கியல் பட்டியலில்" சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒரு திட்டத்தினை ‘‘சிறப்பு முயற்சி’’ திட்டமாகக் கருதுவதற்கு ஆராய வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான செயலாக்கங்களை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை அல்லது சம்பந்தப்பட்ட துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்பாட்டினை முதிர்விற்குக் கொண்டு வருவதாகும். ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்று கருதப்பட்டால், அந்தத் திட்டம் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும். இந்த முறையில், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் 18.01.2007ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 10–ல், சென்னை மெட்ரோ இரயில் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் கீழ் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### 2.13.1 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

2012–13 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்பிற்கிணங்க, வட்டாரங்களுக்கு இடையிலான

ஏற்றத் தாழ்வுகளை களைவதற்குரிய முக்கிய காரணிகளான சுகாதாரம் மற்றும் கல்வி, மேலும் பிற காரணிகளான தனிநபர் வருமானம், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை மற்றும் பாலினம் சார்ந்த வளர்ச்சி ஆகிய காரணிகளின் அடிப்படையில் 100 மிகவும் பின்தங்கிய வட்டாரங்கள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கண்டறியப்படும். இதற்கென ஆண்டிற்கு ரூபாய் 100 கோடி ஒதுக்கீட்டில் மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி ஒன்று நிறுவ ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்நிதியின் மூலம் இவ்வாறு கண்டறியப்பட்ட பகுதிகளில் ஏற்றத்தாழ்வுகளை களையும் பொருட்டு இலக்குகளைக் கொண்டத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அரசாணை நிலை எண்.68, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மாதிகு) துறை நாள் 26.08.2015ல் 105 மிகவும் பின்தங்கிய வட்டாரங்களை பொருத்தமான அளவுகோலின் அடிப்படையில் தேர்வு செய்து மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை செயல்படுத்த ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### 2.13.2 தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் அமைப்பை நிறுவுதல் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஏற்படுத்துதல்

**08.08.2014** அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பேரவை விதி எண்.110இன் கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் தமிழ்நாடு தொலை நோக்கு திட்டம் 2023இன், குறிக்கோள்களில் ஒன்றான, தமிழ்நாட்டை புத்தாக்க மையமாக உருவாக்குவதின் தொடர்ச்சியாக ''தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்'' (Tamil Nadu Innovation Initiatives - TANII) என்ற ஓர் அமைப்பினை மாநில திட்டக்குழுவில்

நிறுவுவதற்கு அரசு ஆணை (நிலை) எண்.93, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (மா.தி) துறை, நாள் 26.09.2014–ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசுத்துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ.150 கோடி நிதி ஒதுக்கீட்டில் மாநில புத்தாக்க நிதியம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு பரிசுகள் வழங்குவதற்காக ‘‘மாண்புமிகு முதலமைச்சரின் புத்தாக்க விருது’’ என்ற பெயரில் விருது ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 3.0 துறைத் தலைமையிடங்கள்

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

i. மாநிலத் திட்டக் குழு
ii. பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை
iii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை
iv. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், இதற்கென ஏற்படுத்தப்பட்ட தனிச் செயலாளரின் (சிறப்பு முயற்சிகள்) கீழ் உள்ள ஒரு கூட்டுத் துறை நிறுவனம்

மேற்கண்ட துறைகளின் பணிகள் சுருக்கமாக பின்வருமாறு:

### 3.1.1 மாநிலத் திட்டக்குழு

மாநிலத் திட்டக்குழு தமிழ்நாட்டில், **1971** ஆம் ஆண்டு மே திங்கள் **25**ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையின் கீழ் மாநிலத் திட்டக்குழு ஒரு ஆலோசனை அமைப்பாக ஏற்படுத்தப்பட்டு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு இத்திட்டக்குழு அளித்து வருகிறது. **02.07.2011** அன்று ஒரு துணைத்தலைவர் மற்றும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டு இம்மாநிலத் திட்டக்குழு திருத்தி அமைக்கப்பட்டது. அரசு முதன்மைச் செயலர், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் அரசு முதன்மை செயலர், நிதித்துறை ஆகியோர் இக்குழுவின் அலுவல் சார் உறுப்பினர்களாவர். மாநிலத் திட்டக்குழுவின் உறுப்பினர் செயலர் இக்குழுவின் நிருவாகப் பொறுப்பு வகிக்கிறார்.

### 3.1.2 மாநிலத் திட்டக்குழுவின் முதன்மையான பொறுப்புகள்

i. ஐந்தாண்டுத் திட்டத்தில் அளிக்கப்பட வேண்டிய முன்னுரிமைகள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனைகளை அரசிற்கு வழங்குதல்.

ii. வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரிப்பதற்குத் தேவையான வழிகாட்டுதல் குழுக்கள் மற்றும் பணிக்குழுக்களை அமைத்தல் மற்றும் வரைவு ஐந்தாண்டு திட்டம் தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்புதல்.

iii. நிதி ஆதாரங்களுக்கேற்ப வரவு செலவுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவது குறித்து அரசுக்குப் பரிந்துரைத்தல்.

iv. வரைவு ஆண்டுத் திட்டங்களை தயாரித்து அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்.

v. ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் திட்டங்களின் முன்னேற்றம் குறித்தும் ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்தும் காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்.

vi. ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் திட்டங்களில் செய்ய வேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களை திருத்தியமைத்தல் ஆகியன குறித்து அரசிற்கு ஆலோசனை அளித்தல்.

vii. மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், அம்மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்கு பரிந்துரை செய்தல்.

viii. நடைமுறையில் உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியை திறம்பட செயல்படுத்துதல்.

ix. மாவட்டத் திட்டக்குழுக்களின் பணிகளை ஒருங்கிணைத்து, திட்டமிடல் நடவடிக்கைகளை மாவட்டம்/வட்டாரம்/ கிராம அளவில் மேற்கொள்ளுதல்.

x. ஐந்தாண்டுத் திட்டம் / ஆண்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களுக்கான துணைத் திட்டங்களை தயாரிப்பது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

xi. மாநில மனித மேம்பாட்டுக் குறியீடு, பாலின மேம்பாட்டுக் குறியீடு ஆகியவற்றில் மாற்றம் / பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சிக் காரணிகளை பல்வேறு நிலைகளில் கண்காணித்து அவற்றை சரிசெய்ய தேவையான வழிமுறைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை கூறுதல்.

xii. திட்டங்கள் வகுத்திடவும், செயல்படுத்தவும் தேவையான சிறப்பு மதிப்பீட்டாய்வுகளை மேற்கொள்ளுதல், மற்றும்

xiii. தமிழ்நாட்டின் பொருளாதாரத்தைக் கண்காணித்து, தேவையான அறிக்கைகளை தேவைப்படும் பொழுது அரசுக்கு அளித்தல் .

xiv. தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள் மற்றும் மாநில புத்தாக்க நிதியம் ஆகியவற்றை நிர்வகிப்பது.

### 3.1.3 தமிழ் நாடு புத்தாக்க முயற்சிகள்

"தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023" அறிக்கையின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாக இந்தியாவிலேயே புதுமையாக்கத்தின் இருப்பிடமாக

தமிழ் நாட்டை உருவாக்க குறிக்கோள் கொண்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த துறைகளில் புத்தாக்கத்தை ஊக்குவிப்பதற்காக "தமிழ்நாடு புத்தாக்க முயற்சிகள்" என்ற ஓர் அமைப்பு மாநிலத் திட்டக்குழுவில் நிறுவப்பட்டுள்ளது. முதற்கட்டமாக இந்த அமைப்பு அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களில் புத்தாக்கத்தை வளர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும். இது படிப்படியாக அரசுத் துறை அல்லாத சேவை நிறுவனங்களுக்கும் நீட்டிக்கப்படும். ‘‘முதலமைச்சரின் புத்தாக்க விருது’’ நிறுவப்பட்டு சிறந்த புத்தாக்க முயற்சிகளுக்கு விருது வழங்கும் திட்டமும் உருவாக்கப்படும்.

### 3.1.4 மாநில புத்தாக்க நிதி

அரசு மாநில புத்தாக்க நிதி என்ற ஓர் அமைப்பை ஏற்கெனவே உள்ள பகுதி –II புதிய திட்டத்தை மாற்றியமைத்து புத்தாக்க முயற்சிகளை உள்ளடக்கிய திட்டங்களுக்கு நிதியளிக்கும் பொருட்டு ஏற்படுத்தியுள்ளது. இந்த நிதியத்திற்கு 2015–16ம் ஆண்டிலிருந்து ஆண்டு தோறும் ரூ.150 கோடி வழங்கப்படும். அரசு ஆணை எண்.124, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் : 24.10.2014 ல் புத்தாக்க திட்டங்களை கண்டறிவதற்கும், நடைமுறை படுத்துவதற்கும் தொடர்புடைய விரிவான வழிகாட்டும் முறைகள் வழங்கப்பட்டுள்ளன.

### 3.1.5 தொடர் திட்டங்களுக்கான மறு ஆய்வு

அரசு ஆணை எண்.83, திட்டம், வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 03.09.2014–ல், குறிப்பிட்டுள்ளபடி வரவு செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் ஆண்டுத் திட்டம்

**2015–16** தயாரிப்பின் ஒரு பகுதியாக குறிப்பிட்ட **14** துறைகளின் தொடரும் திட்டங்களுக்கான மறு ஆய்வு மாநிலத் திட்டக்குழுவால் மேற்கொள்ளப்பட்டது. இந்த மறு ஆய்வு, செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் அரசின் கொள்கை முடிவுகளை சார்ந்து செயல்படுகின்றனவா, அந்த திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதி ஒதுக்கீடு சரியான அளவில் அளிக்கப்படுகின்றனவா மற்றும் அத்திட்டங்கள் சார்ந்த துறைகளின் தேவைகளை பூர்த்தி செய்கின்றதா மற்றும் மாநில முழுமைக்குமான சமூக பொருளாதார முன்னுரிமைகளை அடைய உதவி புரிகின்றனவா என்பதனை அறிந்து கொள்வதற்காக நடத்தப்பட்டன. மேலும், தொடர் திட்டங்களை ஆய்வு செய்து திட்டத்தை தற்போதுள்ள வடிவமைப்பு மற்றும் ஒதுக்கீட்டின் அளவுடன் தொடர்வதற்கான தேவை அல்லது திட்ட ஒதுக்கீட்டை குறைப்பது மற்றும் திட்டத்தின் அமைப்பினை மாற்றுவது அல்லது திட்டத்தினை முழுவதுமாக நிறுத்துவது அல்லது திட்டத்தினை திட்டம் சாராதத் திட்டமாக மாற்றுவது குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டன. இந்த மறு ஆய்வின் மூலமாக குறைவான செயல்பாடு கொண்ட திட்டங்கள் கண்டறியப்பட்டு அத்திட்டங்களை திருத்தி அமைப்பதற்கும் தேவைக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடு செய்யவும் பரிந்துரை செய்யப்பட்டது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் திட்டங்களை செயல்படுத்துவதில் உள்ள பிரச்சனைகள் குறித்து கலந்து ஆலோசிக்கப்பட்டு ஆண்டுத் திட்டம் சிறந்த முறையில் தயாரிப்பதற்கு தீர்வு காணப்பட்டது. மேலும் மாநிலஅரசு, மையஅரசு மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களுக்கு இடையே சிறந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவதற்கு உதவியாக இருந்தது.

### 3.1.6 ஐந்தாண்டுத் திட்டம், ஆண்டு திட்டம் தயாரித்தல்

தமிழ் நாடு மாநிலத் திட்டக்குழு ஏற்படுத்தப்பட்டதிலிருந்து திட்டமிடல் மற்றும் வளர்ச்சி போன்ற அடிப்படை குறிக்கோள்களை அடையும் பொருட்டு ஐந்தாண்டு திட்டங்களை தயாரிக்கின்றது. இதுவரை பதினொன்று ஐந்தாண்டு திட்டங்களை நிறைவு செய்துள்ளது.

### 3.1.6.1 பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் (2012–2017)

பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டம் **(2012–2017)** மொத்த ஒதுக்கீடு ரூ.**2,11,250** கோடி என்ற அளவில் செயல்படுத்த கருதப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கை திட்டத்தைப்பற்றிய ஒரு முன்னோட்டமும், மாநிலத்தின் பொருளாதார நிலையினை உள்ளடக்கிய துறை வாரியான விளக்கமான அத்தியாயங்களை கொண்டுள்ளது.

### 3.1.6.2 ஆண்டுத் திட்டம் 2015–16

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள் மாநில, நடுவண் அரசுகளின் ஐந்தாண்டுத் திட்ட முன்னுரிமைகளையும், குறிக்கோள்களையும் பெரிதும் பின்பற்றி, உருவாக்கப்படுகின்றன. ஆண்டு திட்டம் **2014–15**ல் திட்ட ஒதுக்கீடாக ரூ.**50,660** கோடி அளவில் செயல்படுத்தப்பட்டது. இது **12**வது திட்ட மொத்த ஒதுக்கீட்டில் **23.98** சதவிகிதமாகும். **2015–16** வரவு செலவு திட்டத்தில் ஆண்டுத் திட்டங்களுக்காக ரூபாய் **55,100** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 3.1.6.3 பன்னிரெண்டாவது திட்ட இடைக்கால ஆய்வு

பன்னிரெண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை இடைக்கால ஆய்வு மேற்கொள்வது திருத்தி அமைக்கப்பட்ட மாநிலத் திட்டக்குழுவின் ஒரு முக்கிய பணியாகும். இடைக்கால ஆய்வு ஒவ்வொரு ஐந்தாண்டு திட்டத்தின் மூன்றாம் ஆண்டின் முடிவில் மேற்கொள்ளப்பட வேண்டும் அதன்படி மாநிலத் திட்டக்குழு பல்வேறு வளர்ச்சி துறைகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஆரம்ப பரிசீலனை கூட்டங்களை நடத்தியது. இவற்றில் பன்னிரெண்டாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் துறைவாரியான திட்ட செயல்பாடுகள் மற்றும் நிதி பயன்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆரம்ப கட்ட ஆய்வினை கொண்டு மாநிலத் திட்டக்குழு பன்னிரெண்டாவது திட்ட இறுதி இடைக்கால ஆய்வை தயாரிக்கும்.

### 3.1.7 தமிழ் நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்

‘‘தமிழக அரசால் **2011** ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மாநிலத்திட்டக்குழுவின் துணைத் தலைவர் தலைமையில், ‘‘தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம்’’ என்ற அமைப்பை மாநிலத் திட்டக்குழுவில் ஒரு நிரந்திர அமைப்பாக செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம், நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை நிர்வகிக்கவும், மேம்படுத்தவும், பல்வேறு அரசு துறைகள் / ஆராய்ச்சி நிறுவனங்கள் / பங்குதாரர்களுடன் இணைந்து செயல்பட்டு புதிய திட்டங்கள் மற்றும் கொள்கைகளை வகுக்க வழிவகை செய்கிறது. தமிழ்நாடு நிலப்பயன்பாடு ஆராய்ச்சி வாரியம் நிலம் மற்றும் நீர்வள ஆதாரங்களை

பாதுகாக்கவும், மேம்படுத்தவும், கருத்தரங்கு மற்றும் ஆராய்ச்சிகள் / விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படுகிறது.

## 3.1.8 தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு வாரியத்தின் 2014–15 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

மாநிலத் திட்டக்குழு தற்போது வரைவு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளது. தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் வரைவு நிலப்பயன்பாட்டுக் கொள்கை தயாரிப்பதற்கு ஏதுவாக 6 (ஆறு) முதல்நிலை ஆராய்வுகள், 2013–14ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. இந்த முதல்நிலை ஆராய்வுகளின் தொடர்சியாக 2014-15ஆம் ஆண்டில் மேலும் 6 (ஆறு) புதிய ஆராய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த ஆராய்வுகளில் நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல் மற்றும் சமூக பொருளாதார நிலை மற்றும் தற்போது உள்ள நிலப்பயன்பாட்டு கொள்கைகள் தொடர்பான சட்டங்களின் கட்டமைப்புகளின் காரணமாக நிலப்பயன்பாடு மற்றும் நிலபரப்பு மாற்றங்கள் மதிப்பிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர, மேலும் இரண்டு நீர் மேலாண்மை ஆராய்வுகள் மற்றும் ஒரு சுற்றுச்சூழல் தொடர்புடைய ஆராய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2014-15 ஆம் ஆண்டு, 9 (ஒன்பது) ஆராய்வுகள் மற்றும் 4 (நான்கு) பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மாநிலத் திட்டக்குழுவின் தமிழ்நாடு மாநில நில பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் புவியியல் சார் தகவல் அமைப்பு / தொலையுணர்தல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தை தொடர்ச்சியாக நடத்த

ஏற்பாடுகள் செய்வதின் வாயிலாக தமிழ்நாடு புவியியல் சார் தகவல் அமைப்பு திட்டம் மற்றும் புவியியல் சார் தகவல் அமைப்பிற்கான தரநிலைகள் முறைப்படுத்துதலுக்கான அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக 2015-16 ஆம் ஆண்டு பல தொடச்சியான பயிலரங்கங்கள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலமாக தமிழ்நாட்டிற்கான புவியியல் சார் தகவல் அமைப்பின் தரநிலைகள் முறைபடுத்தப்படும் மற்றும் இந்த பயிலரங்குகளின் செயல்முறைகளை புத்தகமாக அச்சிட்டு துறை சார்ந்த வல்லுனர்களுக்கு விநியோகிக்கப்படும்.

2015-16 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி வாரியத்தின் கீழ் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள அரசு துறைகள் / கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் / முகவர்களிடமிருந்தும் முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. 2015-16 ஆம் ஆண்டுக்கான திட்டப் பணிகள் தமிழ்நாடு மாநில நிலப்பயன்பாட்டு ஆராய்ச்சி கூட்டங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்படும்.

### 3.1.9 மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி

தனிநபர் வருமானம், வேலைவாய்ப்பின்மை, வறுமை நிலை, சுகாதாரம், கல்வி மற்றும் பாலின மேம்பாடு இவற்றில் மாவட்டங்களுக்கு இடையே மற்றும் மாவட்டத்திற்குள் நிலவும் ஏற்றத் தாழ்வுகளைச் சீரமைக்க 2012–13ம் ஆண்டிலிருந்து தமிழக அரசால் செயல்படுத்தப்படும் ஒரு தனித்துவமான திட்டம், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டமாகும். இந்தத் திட்டத்தின் வாயிலாக 100 மிகவும் பின் தங்கிய வட்டாரங்கள் மற்றும் பின்தங்கிய நகர்புற உள்ளாட்சி அமைப்புகள்

கண்டறியப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ.100.00 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலத் திட்டக்குழு, இக்காரணிகளை பயன்படுத்தி 105 பின் தங்கிய வட்டாரங்களையும், மாநகராட்சி, நகராட்சி மற்றும் நகர பஞ்சாயத்துகளில் உள்ள குடிசை பகுதிகளை கண்டறிந்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மாநிலத் திட்டக்குழுவில் இத்திட்டம், மாவட்ட ஆட்சியாளர்களின் மூலமாக மாவட்ட திட்டப் பிரிவுகள் மற்றும் பிற துறைகளின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மாவட்ட அளவில் முன் மொழியப்படும் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கவும், திட்டச் செயல்பாட்டை வழி நடத்தவும், கண்காணிக்கவும் மாநில அளவில் ஒரு அதிகாரக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட அளவில், தொலைநோக்கு திட்டம் தயாரித்தல், தகுந்த திட்டங்களை உருவாக்குதல், திறனை மேம்படுத்துதல் மற்றும் மேற்பார்வையிடல் போன்ற பணிகளை மேற்கொள்ள மாவட்ட நிர்வாகத்திற்கு உதவிட கல்வி மற்றும் ஆராய்ச்சி வள நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

சில குறிப்பிட தகுந்த திட்டங்களாவன; ஒருங்கிணைந்த பண்ணையம் முறையை ஊக்கப்படுத்துதல், ஆயத்த ஆடை தயாரிப்பு, இணைப்பு வசதி இல்லாத மக்களின் இருப்பிடங்களுக்கு சாலை அமைத்தல், போக்குவரத்து வசதி இல்லாத பகுதிகளுக்கு ஆட்டோ வழங்குதல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, தோட்டக்கலை சார்ந்த திட்டங்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையம், துணை சுகாதார

நிலையங்களுக்கு மருத்துவ உபகரணங்கள் வழங்குதல் மற்றும் அடிப்படை வசதி மேம்படுத்துதல் போன்றவை.

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதியின் கீழ் இதுவரை 210.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாட்டிலுள்ள 30 மாவட்டங்களில் உள்ள 105 பின்தங்கிய வட்டாரங்களில், 320 திட்டங்களைச் செயல்படுத்த மாநிலத் திட்டக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. 2015–16 ஆம் ஆண்டிலும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 3.1.10. மனித மேம்பாட்டு அறிக்கை

மாநிலத் திட்டக்குழு மாநிலத்திற்கும் மற்றும் 32 மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் மனித மேம்பாட்டு அறிக்கையை மனித மேம்பாட்டிலுள்ள ஏற்றத்தாழ்வுகளில் இடைவெளியை நீக்கும் திட்டத்தின் கீழ் தயாரித்து வருகிறது. மனித மேம்பாட்டுக் குறியீடுகள் மாவட்டங்களுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை வெளிக்கொணரும் மாவட்ட மனித மேம்பாட்டு அறிக்கைகள், மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கிடையே நிலவும் ஏற்றத்தாழ்வுகளை ஆராயும். மனித மேம்பாட்டு அளவுகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்கும், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதிக்கான தொலைநோக்கு திட்டம் தயாரிப்பதற்கு தேவையான உள்ளீடுகளை அளிப்பதற்கும் இவ்வறிக்கை பயனுள்ளதாய் அமையும். மனித மேம்பாட்டு அறிக்கை தயாரிப்பது மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்குத் தேவையான உள்ளீடுகளை அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மனித மேம்பாட்டு அறிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள புள்ளி விவரங்களை ஒத்திசைவு

செய்யவும், ஆய்வு முடிவுகளை விவரிக்கவும், மாநில உயர்நிலை குழு கூட்டம் நடத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாக சில புள்ளி விவரங்களில் தற்போதைய புள்ளி விவர தகவல்களை அறிக்கையில் அளிப்பதற்கு தொடர்புடைய துறைகளுடன் தனித்தனியே கூட்டங்கள் நடத்தப்பட்டது. அவ்வாறு சீரமைக்கப்பட்ட மாநில மற்றும் 20 மாவட்டங்களுக்கான மனித மேம்பாட்டு அறிக்கை உயர்நிலை குழுவிற்கு அளிக்கப்பட்டுள்ளது.

### 3.1.11 பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல்

பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் மேற்கொள்ளுதல் வளர்ச்சி குறித்த முக்கிய பிரச்சனைகள் மற்றும் வருங்காலத்தில் முன்னுரிமை அளிக்க வேண்டிய இலக்குகள் வல்லுநர்களோடு பயிலரங்கங்கள் / கருத்தரங்குகளை நடத்துவதன் வாயிலாக மாநிலத் திட்டக்குழுவினரால் கண்டறியப்பட்டுள்ளன. இதன் தொடர்பாக 2014–15ஆம் ஆண்டில் 29 கருத்தரங்கங்கள் மற்றும் பயிலரங்கங்கள் மேற்கொள்ளப்பட்டு அக்கூட்டத்தின் பரிந்துரைகள் புத்தகங்களாக தயாரிக்கப்பட்டு அனைத்து துறை தலைவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டது. மேலும் 2014–15ஆம் ஆண்டில் பல்வேறு துறைகள் தொடர்புடைய முக்கிய பிரச்சனைகள் குறித்து 15 ஆராய்வுகள் துறைசார்ந்த வல்லுனர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் 2015–16ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட வேண்டிய பயிலரங்கங்கள் / கருத்தரங்கங்கள் மற்றும் ஆராய்வுகள் துறைகளிடம் கோரப்பட்டுள்ளது.

### 3.1.12 மாநில மதிப்பீடு மற்றும் ஆய்வுக்குழு

மாநிலத் திட்டக்குழுவில் செயல்படும் மதிப்பீடு மற்றும் ஆய்வுக்குழு, விரிவான கலந்தாய்வு மேற்கொண்டு மதிப்பீட்டு அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளை பரவலாக்கம் செய்து உரிய மேல் நடவடிக்கை எடுத்திட உறுதுணை செய்கிறது. **2014–15**ம் ஆண்டில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சி துறையின் **8** மதிப்பீட்டு ஆய்வறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள பரிந்துரைகளின் மேல் மறு ஆய்வு மற்றும் அது தொடர்புடைய துறைகளின் மேல்நடவடிக்கை குறித்து மாநில திட்டக்குழுவிடம் முன்னிலைப்படுத்தப்பட்டது.

## 3.2 பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை

**3.2.1** அரசின் பல்வேறு வளர்ச்சி திட்ட உருவாக்கத்திற்கு தேவையான முக்கிய குறியீட்டெண்களுக்கான புள்ளி விவரங்களை சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், அறிக்கை வெளியிடுதல் போன்ற பணிகளில் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறை ஈடுபட்டு வருகிறது. மத்திய, மாநில அரசுகளால் எடுக்கப்படும் கொள்கை முடிவுகளை செயல்படுத்துவதற்குத் தேவையான தொடர்புடைய விவரங்களை சரியான நேரத்தில் வழங்கி வருகிறது. இத்துறை மாநிலத்தின் புள்ளி விவர முகமை அமைப்பாக செயல்பட்டு வருகிறது. வேளாண்மை, வேளாண்மை சார்ந்த பிரிவுகள், தொழில் துறைப் பிரிவு, பணிகள் பிரிவு ஆகியவற்றிற்கான புள்ளி விவரங்களை தொகுத்து வெளியிடுவதும் இத்துறையின் முக்கிய பொறுப்பாகும்.

இத்துறை, மத்திய, மாநில அரசுகளால் அவ்வப்போது ஒப்படைக்கப்படும் சிறப்பு கணக்கெடுப்புகள் மற்றும் ஆய்வுகள் மேற்கொண்டு

அரசுக்கு அறிக்கை தயாரித்து வழங்குவது மட்டுமன்றி, பல்வேறு பொருளாதார அளவீடுகளான மாநில வருவாய், மாவட்ட வருவாய், தொழில் உற்பத்தி குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், மொத்த விலை குறியீட்டெண் போன்ற மதிப்பீடுகளும் இத்துறையினால் கணிக்கப்படுகின்றன. மேலும், தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, தமிழ்நாடு பருவமும் மற்றும் பயிர் பற்றிய அறிக்கை, பொருளாதார நிலை குறித்த அறிக்கை போன்றவை இத்துறையால் வெளியிடப்படுகின்றன. இவ்வறிக்கைகள், தொடர்புடைய பிற துறைகளுக்கு உடனடி பார்வைக் கையேடுகளாக (ready reference material) பயன்படுகின்றன. இத்துறைப் பணியாளர்கள் பிற துறைகளில் பணியமர்த்தப்பட்டு அத்துறைகளில் அன்றாட செயல்பாடுகள், அவ்வப்போது தேவைப்படுகின்ற புள்ளி விவரங்களை சேகரித்தல், தொகுத்தல், அறிக்கை தயாரித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இத்துறை, பின்வரும் திட்டம் சார்ந்த பணிகளுக்கும் திட்டம் சாரா பணிகளுக்கும் முன்னுரிமை அளித்து செயல்படுத்தி வருகிறது.

### 3.2.2 திட்டம் சார் பணிகள்

### மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்

### 1. வேளாண்மைக் கணக்கெடுப்பு

வேளாண்மைக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. இது விரிவான வேளாண்மை புள்ளிஇயல் திட்டத்துடன் ஒருங்கிணைந்த திட்டமாகும். இக்கணக்கெடுப்பில், மாநிலத்தின் வேளாண்மை தொடர்பான முக்கிய புள்ளி

விவரங்களை சேகரித்தல், தொகுத்தல் ஆகியன முக்கிய செயல்பாடுகளாகும். பல்வேறு வகையான நில கைப்பற்றுகள் தொடர்பான விவரங்கள் வருவாய் துறையின் நிலப் பதிவேடுகளிலிருந்து பெறப்படுகின்றன. நில உடமையாளர்களின் சமூகநிலை, நிலப் பயன்பாடு, நீர்ப்பாசன ஆதாரம், பயிர் சாகுபடி முறை, குத்தகைத் தன்மை, கால்நடைகள், வேளாண் உபகரணங்கள், கருவிகளின் பயன்பாடு, பூச்சிக் கொல்லி, இயற்கை உரப் பயன்பாடு போன்ற பல புள்ளி விவரங்கள் இக்கணக்கெடுப்பின் மூலம் சேகரிக்கப்படுகின்றன.

ஒன்பதாவது வேளாண்மைக் கணக்கெடுப்பில் **(2010-11)**, மூன்று பகுதிகளுக்கான களப்பணிகள் முடிவுற்று, அதன் முடிவுகள் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. மூன்று பகுதிகளுக்கான அடிப்படைப் புள்ளி விவரங்கள் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் பகுதி–Iக்கான அறிக்கை **27.05.2014** அன்று வெளியிடப்பட்டது. பகுதி–IIக்கான அறிக்கை தயாரிக்கும் பணி தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணி முடிவுற்றதும், அடுத்த கட்ட பகுதிக்கான அறிக்கை தயாரிக்கும் பணி மேற்கொள்ளப்படும்.

பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பின் **(2015–16)** மண்டல அளவிலான கூட்டம் மத்திய அரசால் **30.10.2014** முதல் **01.11.2014** வரை மதுரையில் நடத்தப்பட்டது. பத்தாவது வேளாண்மைக் கணக்கெடுப்பினை அகில இந்திய அளவில் சிறப்பாக நடத்துவதற்காக விரிவான அறிவுரைகளும் படிவங்களை பூர்த்தி செய்வது குறித்து வழிமுறைகளும் இக்கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து மாநில, யூனியன் பிரதேச

அலுவலர்களால் விவாதிக்கப்பட்டு முடிவுகள் எடுக்கப்பட்டன.

## 2. பொருளாதாரக் கணக்கெடுப்பு

பொருளாதாரக் கணக்கெடுப்பு இத்துறையால் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. அமைப்புசாரா நிறுவனங்களின் எண்ணிக்கை, அதில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகியவைப் பற்றிய விரிவான புள்ளி விவரக் கட்டமைப்பை உருவாக்குவதே பொருளாதாரக் கணக்கெடுப்பின் நோக்கமாகும். இவ்விவரங்களை அடிப்படையாகக் கொண்டு தேசிய வருவாய் மதிப்பீடுகளில் அமைப்புசாரா துறையின் பங்களிப்பை கணிப்பதற்குத் தேவையான தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. வளர்ச்சித் திட்டங்களை திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் தேவையான நிறுவன புள்ளி விவரங்கள் குறிப்பாக அமைப்புசாரா துறை, அவற்றில் வேலைவாய்ப்பு நிலை பற்றிய விவரங்கள் இக்கணக்கெடுப்பின் மூலம் கிடைக்கப் பெறுகின்றன.

- ✓ பொருளாதாரக் கணக்கெடுப்பு மத்திய அரசின் 100 விழுக்காடு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பினை தமிழ்நாட்டில் நடத்துவதற்கான பணியிடங்கள் உருவாக்கத்திற்கும் முப்பது மாதங்கள் செயல்பாட்டில் இருக்கவும் இந்திய அரசின் மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் தனது இசைவை தெரிவித்துள்ளது.

- ✓ அரசு ஆணை (நிலை) எண்.96, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 13.06.2011–க்கிணங்க மாநில அளவிலான வழிகாட்டுதல் குழுவும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- ✓ தமிழ்நாட்டில் ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு நடத்துவதற்காக இந்திய அரசின் மத்திய புள்ளிஇயல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் மொத்த செலவாக 37.93 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ் நாட்டில் இப்பணிக்கான களப்பணி / கணக்கெடுப்புப் பணி முடிக்கப்பட்டுள்ளன.
- ✓ ஆறாவது பொருளாதாரக் கணக்கெடுப்பிற்கான கணக்கெடுப்புப் பணி மாநிலம் முழுவதும் நடத்தி முடிக்கப்பட்டு தற்காலிக அட்டவணை முடிவுகள் 15.10.2014 அன்று வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 6A படிவங்கள் தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டு, தொடர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்கள் குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு**

இத்திட்டம் மூலம் பழம், காய்கறி, சிறுபான்மைப் பயிர்கள் ஆகியவற்றிற்கான விளைச்சல் விகிதத்தையும், மொத்த உற்பத்தியையும் பயிர் அறுவடை பரிசோதனைகள் மூலம் துல்லியமாகக் கணக்கிடப்படுகின்றன. இத்திட்டத்தில் மா, பலா, வாழை, திராட்சை, கொய்யா,

ஆரஞ்சு, எலுமிச்சை, அன்னாசி ஆகிய பழவகைப் பயிர்களுக்கும், தக்காளி, வெண்டை, கத்தரி, முட்டைகோசு, சர்க்கரைவள்ளி ஆகிய காய்கறிப் பயிர்களுக்குமான விளைச்சல் விவரங்கள் கணிப்பதற்காக **2014–15**–ல் **660** கிராமங்களில் **1320** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டன. சிறுபான்மைப் பயிர் திட்டத்தில் **2014–15**–ல் மிளகாய், வெங்காயம், மஞ்சள், உருளைக்கிழங்கு, கொத்தமல்லி, மரவள்ளிக் கிழங்கு, முந்திரி, இஞ்சி ஆகிய பயிர்களில் **625** கிராமங்களில் **1250** பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்தப்பட்டன.

## 4. இந்தியப் புள்ளி இயல் அமைப்பினை வலுப்படுத்தும் திட்டம்

இந்தியப் புள்ளிஇயல் வலுப்படுத்தும் திட்டம் (India Statistical Strengthening Project) மாநில அளவில் புள்ளிஇயல் பணிகளை ஒருங்கிணைக்கவும், நிர்வகிக்கவும், மனிதவளத்தை மேம்படுத்தவும், புள்ளிஇயல் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், புள்ளிஇயல் விவரங்கள் சேகரிக்கும் **22** இணை துறைகளுக்கு தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதி செய்வதற்கும் வழிவகுக்கின்றது.

இத்திட்டத்தில், மாநில அரசின் பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையில் பின்வரும் சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

- ❖ துறைத் தலைமையிடத்திற்கு **4.69** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, இக்கட்டடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் **26.6.2014** அன்று திறந்து வைக்கப்பட்டது.

- ❖ மொத்தமுள்ள **385** வட்டாரங்களில், **242** வட்டாரங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாக வட்டாரப் புள்ளிஇயல் ஆய்வாளார்களுக்கென **6.28** கோடி ரூபாய் மதிப்பீட்டில் அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டு, தற்போது **229** கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.
- ❖ **மண்டல புள்ளி இயல் இணை இயக்குநர் அலுவலகங்கள் :** மொத்தம் கட்டப்பட வேண்டிய ஐந்து கட்டடங்களில் மூன்று அலுவலகங்களுக்கான கட்டுமானப் பணி முடிக்கப்பட்டுள்ளது.
- ❖ **மாவட்ட புள்ளி இயல் துணை இயக்குநர் அலுவலகங்கள் :** மொத்தம் கட்டப்பட வேண்டிய **14** அலுவலகங்களில் ஒன்பது அலுவலகங்களுக்கான கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள அலுவலகங்களுக்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ **கோட்ட புள்ளி இயல் உதவி இயக்குநர் அலுவலகங்கள்:** மொத்தம் கட்டப்பட வேண்டிய **49** அலுவலகங்களில் **23** அலுவலகங்களுக்கு கட்டடப் பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள அலுவலகங்களுக்கு பல்வேறு நிலைகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ புள்ளிஇயல் பணியாளர்களின் திறனை மேம்படுத்த உரிய பயிற்சிகள் வழங்கப்பட

வேண்டுமென்ற கருத்தில், மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனம் அமைக்கப்பட்டு, 01.05.2012 முதல் துறைத் தலைமையிட கட்டடத்தில் தற்காலிகமாக செயல்பட்டு வருகின்றது. இந்நிறுவனத்திற்கு கட்டடம் கட்டத் தேவையான நிலம் சென்னை மாவட்டம், மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், களிக்குன்றம் கிராமத்தில் கண்டறியப்பட்டு, கட்டடப் பணிகள் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

❖ மாவட்ட அளவில் திட்டப் பணிகளின் தரத்தை உயர்த்தவும், ஆய்வுப் பணிகளை மேம்படுத்தவும், தேவையான ஊர்தி வசதியை கருத்திற்கொண்டு 187.73 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 31 மாவட்டங்களுக்கு பொலிரோ வாகனமும், துறைத் தலைமையிடத்திற்கு ஒரு சீருந்தும், தமிழ் நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனத்திற்கு ஒரு சீருந்தும், பொலிரோ வாகனமும் வாங்கப்பட்டுள்ளன.

❖ இணையதள அமைப்பிற்கென (Web Portal) 103 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப் பட்டுள்ளது.

❖ **மைய அரசின் ஒதுக்கீடு குறைப்பு**

இத்திட்டத்தின் கீழ், மாநில புள்ளி இயல் செயல்முறை திட்டத்தினை 40.76 கோடி

ரூபாய் மொத்த மதிப்பீட்டில் தமிழ் நாட்டில் அமல்படுத்துவதற்கு 28.9.2011 அன்று மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. இதில் மத்திய அரசின் பங்கு 39.34 கோடி ரூபாய் மற்றும் மாநில அரசின் பங்கு 1.42 கோடி ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பிறகு மத்திய அரசு 2011–12ஆம் நிதியாண்டில் 11.54 கோடி ரூபாய் மட்டும் விடுவித்தது.

மைய அரசு பல்வேறு காரணங்களை முன்னிட்டு பின்னர் தொகை ஏதும் விடுவிக்காததாலும், இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட வேண்டிய அனைத்து பணிகளும் முடங்கிபோனதாலும் மாநில அரசு, மத்திய அரசிடமிருந்து ஒதுக்கீட்டை எதிர்நோக்கி கட்டடப் பணிகளுக்காக மேலும் கூடுதலாக 13.46 கோடி ரூபாயும், அனைத்து அலுவலகங்களுக்கு அறைகலன் வழங்குவதற்கு 2.32 கோடி ரூபாயும் ஒதுக்கியுள்ளது.

மத்திய அரசு மாநில அரசை கலந்தாலோசிக்காமல் 17.12.2014 நாளிட்ட கடிதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட 39.34 கோடி ரூபாயை தற்போது 19.31 கோடி ரூபாயாகக் குறைத்தும், மாநில அரசின் பங்கு தொகையை 1.42 கோடி ரூபாயிலிருந்து 4.84 கோடி ரூபாயாக உயர்த்தியும் அங்கீகரித்துள்ளது. மேலும், இப்புதிய ஒதுக்கீட்டின்படி திருத்திய

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தயார் செய்ய மாநில அரசை மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது. திருத்தப்பட்ட ஒதுக்கீட்டின்படி திருத்தப்பட்ட வரைவு புரிந்துணர்வு ஒப்பந்தம் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

**5. மாநிலம், மாவட்ட அளவில் 13–வது நிதிக் குழுவின் மானியத்தின் மூலம் புள்ளிஇயல் அமைப்பை வலுப்படுத்துதல்**

தரமான புள்ளி விவரங்கள் முக்கிய கொள்கை முடிவுகள் எடுக்க ஏதுவாகவும், மாநிலங்களின் புள்ளி விவரத் திறனை அதிகரிக்கவும், மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் தேவைப்படும் புள்ளி விவரங்களைத் துல்லியமாக குறிப்பிட்ட காலத்திற்குள் அளிப்பதற்கும் ஏதுவாக, 13–வது நிதிக்குழு மானியத்தில் ஒரு மாவட்டத்திற்கு ஒரு கோடி ரூபாய் வீதம் தமிழ்நாடு மாநிலத்திற்கு 31 கோடி ரூபாய் நிதியினை 2010–2015 காலத்திற்குள் செலவு செய்யும் வகையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, 13–வது நிதிக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்தும் வகையில், மத்திய புள்ளிஇயல் அலுவலகம் அகில இந்திய அளவிலான ஐவகை முக்கிய பணிகளை மைல்கற்களாக (Five Milestones) நிர்ணயித்துள்ளது :

1. வணிக நிறுவனப் பட்டியலைத் (Business Register) தயாரித்தல்
2. உள்ளாட்சி நிறுவனங்களின் வரவு–செலவின அறிக்கைகளைத் தயாரித்தல், அவற்றை மேம்படுத்துதல்.

3. மத்திய மாநில மாதிரிகளின் விவரங்களை ஒருங்கிணைத்து மாவட்ட அளவில் புள்ளி விவரங்கள் தயாரித்தல்.
4. வேளாண்மைப் பணிகள் தொடர்பான விவரங்களை சேகரித்தல்
5. மாவட்ட அலுவலகங்களை மாநில துறைத் தலைமையிடத்துடன் இணையதள/உள்தள வலைய வசதியுடன் இணைத்தல்

பதின்மூன்றாவது நிதிக்குழு மானியத்திலிருந்து இதுவரை,

- அனைத்து மாவட்டங்களுக்கும் ஒலிபெருக்கியுடன் ஒளிபடக்காட்சிக் கருவி (Projector with Amplifier), பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ள உபகரணப் பெட்டிகள் போன்றவை வாங்குவதற்கும், முக்கிய அறிக்கைகள் மற்றும் சிறப்பு வெளியீடுகள் தயாரித்து அச்சிடவும் 1.03 கோடி ரூபாய் 2011–12ஆம் ஆண்டில் செலவிடப்பட்டுள்ளது.
- மீதமுள்ள 29.97 கோடி ரூபாய்க்கான திருத்திய நடவடிக்கை திட்டம் (Revised Action Plan), மாநில உயர்மட்ட கண்காணிப்புக் குழு மற்றும் பிரத்யேகமாக மத்திய அரசின் கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், தமிழ்நாடு கால்நடை மற்றும் கால்நடை

பராமரிப்பு அறிவியல் பல்கலைக் கழகம், மீன் வளத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை ஆகிய பிற நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் ஆய்வுகள் செவ்வனே நடைபெற்று வருகின்றன. இத்துறையின் மூலமும் ஆய்வுகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. அவற்றில் சில ஆய்வுகள் முடிவடைந்து அறிக்கை வெளியிடப்படும் நிலையிலும், முடிவுகளை ஆய்வு செய்யும் நிலையிலும் உள்ளன. அவ்வாய்வுகள் குறித்த கருத்துப்பட்டறை 21.01.2015 அன்று சென்னையில் நடத்தப்பட்டது. இதில் மத்திய அரசு அதிகாரிகளும் மற்ற துறையின் அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.

- மத்திய அரசிடமிருந்து இதுவரை (ஒரு தவணைக்கு 6.20 கோடி ரூபாய் வீதம்) மூன்று தவணைகளில், மொத்தம் 18.60 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளது.

- மத்திய அரசு இதுவரை விடுவித்துள்ள மொத்த தொகையான 18.60 கோடி ரூபாயில், மார்ச் 2015 வரை 18.88 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

- மாவட்ட அலுவலகங்களை மாநில துறைத் தலைமையிடத்துடன் இணையதள/ உள்தள வலைய வசதி மூலமாக இணைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 6. பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்களை உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்

நிலப் பயன்பாடு குறித்து மதிப்பிடவும், வேளாண் விளை நிலங்களை விவசாயமற்ற காரணங்களுக்காகப் பயன்படுத்துவதைத் தடுப்பது தொடர்பாக முக்கிய விவரம் சேகரிப்பதற்கும் நிலப் பயன்பாடு புள்ளி விவரம் பயன்படுகிறது. நிலப் பயன்பாடு குறித்த உத்தேச மதிப்பீட்டறிக்கை ஆண்டு தோறும் பயிர் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டத்தின் மூலம் தயாரிக்கப்படுகிறது.

ஒவ்வோர் ஆண்டும் 20 விழுக்காடு கிராமங்களில் முன்னுரிமை அடிப்படையில் நில உபயோகப் புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல், மூன்று பருவத்திலும் (காரிப், ராபி, கோடை), பயிர் வாரியாக பாசன, மானாவாரி பரப்பில் நவீன பயிர்கள் உள்ளூர் ரகப் பரப்பு ஆகியன மதிப்பீடு செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களில் வருவாய், புள்ளிஇயல், வேளாண்மை ஆகிய மூன்று துறை அலுவலர்களும் இணைந்து கூட்டு பயிர் பரப்பாய்வு பணிகளும் மேற்கொள்ளப்படுகிறது.

2014–15 ஆம் ஆண்டில் 3482 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு காரிப் பருவத்திற்கான மதிப்பீடுகள் கணிக்கப்பட்டு கூடுதல் புள்ளி இயல் ஆலோசகர், புதுடில்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

## 7. பயிர் மேம்பாட்டுத் திட்டம்

மாநிலத்தில் பயிர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மாதிரி கிராமங்களில் கிராம நிர்வாக அலுவலர்களால் பயிர் பரப்பு கணிக்கப்பட்ட பின்னர் பயிர் பரப்பாய்வு செய்தலும், அடங்கலில் கிராமத்திற்கான பயிர் பரப்பின் கூட்டுத்தொகை சரியான முறையில்

கணிக்கப்படுகிறதா என ஆராயவும், முக்கிய உணவுப் பயிர்களுக்கும், இதரப் பயிர்களுக்குமான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனைகளை மேற்பார்வை செய்தலும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இப்பணிகளானது மத்திய, மாநில அரசு அலுவலர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண் புள்ளி விவரங்களை முறையாக ஆய்வு செய்து, அவற்றை செம்மைபடுத்த தக்க வழி வகைகளை ஏற்படுத்தி புள்ளி விவரங்களின் தரத்தினை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

இத்திட்டம் பின்வரும் நடவடிக்கைகளை உள்ளடக்கியுள்ளது.

- **பயிர் பரப்பில் மாதிரி ஆய்வு (படிவம் ஏ.எஸ். 1.0)**

**2013–14**ஆம் ஆண்டு பயிர் பரப்பாய்வுப் பணிக்கான ஏ.எஸ்.**1.0** படிவங்கள் (மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு **260** கிராமங்கள் வீதம்) அனைத்து மூன்று பருவங்களுக்கும் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ்.**1.0** படிவங்களின் இறுதி அட்டவணைகள் **2012–13**ஆம் ஆண்டுக்கு அனைத்து மூன்று பருவங்களுக்கும், **2013–14**ஆம் ஆண்டுக்கு முதல் பருவத்திற்கு தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **அடங்கல் பதிவேட்டின் பக்கவாரியான பயிர்பரப்பு விவரங்களின் கூட்டுத்தொகை சரிபார்த்தல் (படிவம் ஏ.எஸ். 1.1)**

**2013–14**ஆம் ஆண்டுக்கு பயிர் பரப்பாய்வு பணிக்காக தேர்வு செய்யப்பட்ட கிராமங்களின்

அடங்கலின் பக்கவாரியான பயிர் பரப்பு விவரங்களின் கூட்டுத்தொகை சரிபார்த்தல் சம்பந்தமான ஏ.எஸ்.1.1 படிவங்கள் (மத்திய மற்றும் மாநில மாதிரிகளுக்கு 260 கிராமங்கள் வீதம்) அனைத்தும் களப்பணி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. ஏ.எஸ். 1.1 படிவங்களின் இறுதி அட்டவணைகள் 2012–13ஆம் ஆண்டுக்கு தயாரிக்கப்பட்டு, தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

- **பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வைப் பணி (படிவம் ஏ.எஸ். 2.0)**

2013–14ஆம் ஆண்டுக்கு பயிர் அறுவடை பரிசோதனை ஆய்வுக்கான ஏ.எஸ்.2.0 படிவங்கள் (780 பரிசோதனைகள் வீதம் மத்திய மற்றும் மாநில மாதிரிகள்) அனைத்தும் களப்பணி அலுவலர்களிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ளன. 2012–13ஆம் ஆண்டுக்கு ஏ.எஸ்.2.0 படிவங்களின் இறுதி அட்டவணைகள் நெல் (கார், சம்பா, நவரை) மற்றும் இதர பயிர்களுக்கு (சோளம், கம்பு, கேழ்வரகு, பருத்தி, கரும்பு, வேர்க்கடலை, எள் மற்றும் மக்காச்சோளம்) தயாரிக்கப்பட்டு தேசிய மாதிரி ஆய்வு நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

### 3.2.3. துறையால் செயல்படுத்தப்படும் இதர புள்ளிஇயல் திட்டங்களின் சுருக்கம்

பொருள்இயல் மற்றும் புள்ளிஇயல் துறையால் செயல்படுத்தப்படும் இதர திட்டம் சார், திட்டம் சாரா திட்டப்பணிகளின் சுருக்கம் பின் வருமாறு:

**வேளாண் புள்ளிஇயல்**

| | | |
|---|---|---|
| 1. | பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி முன்மதிப்பீடு | ஒவ்வோர் ஆண்டும் செப்டம்பர், டிசம்பர், மார்ச், ஜூன் மாதங்களில் பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி விவரங்கள் முன்மதிப்பீடு செய்யப்படுகின்றது. |
| 2. | ஜமாபந்தி மூலம் இறுதி செய்யப்படும் கிராமவாரியான பரப்பு | ஒவ்வொரு பசலி ஆண்டு முடிவிலும் கிராம வாரியான பயிர் பரப்பு விவரங்கள் ஜமாபந்தியில் இறுதி செய்யப்பட்டு மாவட்ட வாரியாகவும், மாநில அளவிலும் தொகுக்கப்படுகின்றன. |
| 3. | பொது பயிர் மதிப்பீட்டாய்வு | 9276 பயிர் அறுவடை பரிசோதனைகள் 2014–15ஆம் ஆண்டு (பசலி ஆண்டு 1424) நடத்தப்பட்டு முக்கியமான 16 பயிர்களுக்கு விளைச்சல், உற்பத்தி மற்றும் உற்பத்தி திறன் ஆகியவை மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலும் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |
| 4. | தென்னை மற்றும் கமுகு குறித்த பயிர் மதிப்பீட்டாய்வு | தென்னை பயிருக்கு சுமார் 380 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி மதிப்பீடும், கமுகு பயிருக்கு சுமார் 75 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு சராசரி விளைச்சல் மற்றும் உற்பத்தி மதிப்பீடும் செய்யப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| **5.** | மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்) **2014–15**ல் உள்வட்ட அளவில் காரிப் பருவத்தில் மட்டும் | மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (தேசிய பயிர் காப்பீட்டு திட்டம்) **1424**ஆம் பசலி ஆண்டில் **(2014–15)** காரிப் பருவத்தில் **16** பயிர்களுக்கு **42,600** பயிர் அறுவடை பரிசோதனைகள் உள்வட்ட அளவில் மேற்கொள் வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. |
| **6.** | தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் | **1424**ஆம் பசலி ஆண்டில் **(2014–15)**, இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கும்பொருட்டு, **20** பயிர்களின் கீழ் அறிவிக்கை செய்யப்படும் வட்டாரம் / குறுவட்டம் வாரியாக ராபி பருவத்தில் சுமார் **41,300** பயிர் அறுவடை பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விளைச்சல் மதிப்பீடுகள் கணிக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 7. | மேம்படுத்தப்பட்ட தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம் (2014–15ல் கிராம அளவில் காரிப் பருவத்தில் மட்டும்) | இத்திட்டம், தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது. வட்டார / உள்வட்ட அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள் நடத்துவதற்கு பதிலாக அனைத்து வருவாய் கிராமங்களிலும் பயிர் அறுவடை பரிசோதனைகள் முன்னோடித் திட்டமாக நாமக்கல், கடலூர் மற்றும் சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் 1424ஆம் பசலி ஆண்டில் (2014–15) காரிப் பருவத்தில் பத்து பயிர்களுக்கு 7,588 பரிசோதனைகள் நடத்த திட்டமிடப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது. |
| 8. | மழைப் புள்ளிஇயல் | சுமார் 628 நிலையங்களிலிருந்து சாதாரண மழைமானி மூலம் மழை விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாதம், பருவம், ஆண்டு வாரியாக தொகுக்கப்படுகின்றன. |
| 9. | நீர்ப்பாசன புள்ளிஇயல் | பாசன ஆதாரங்கள் வாரியாக முக்கிய பயிர்களின் பரப்பு, நீர்ப்பாசன வகை ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு தொகுக்கப்படுகின்றன. |
| 10. | விவசாயக் கூலி குறியீட்டெண் | மாநிலத்தில் உள்ள 385 வட்டாரங்களிலும் ஒரு வட்டாரத்திற்கு ஒரு கிராமம் வீதம் 385 கிராமங்கள் தேர்வு |

| | | |
|---|---|---|
| | | செய்யப்பட்டு, அவற்றில் விவசாய தொழில்களுக்கு வழங்கப்படும் கூலி விவரங்கள் சேகரிக்கப்பட்டு விவசாயக் கூலி குறியீட்டெண் மதிப்பீடு கணிக்கப்படுகின்றது. |
| **11.** | விற்பனை மிகுதி திட்டம் | நெல் உற்பத்தியில் வழங்கப்பட்ட கூலி, விதைப் பயன்பாடு, சொந்த உபயோகம் போன்றவை போக விற்பனைக்காக ஒதுக்கப்படும் நெல் அளவு குறித்து மதிப்பீடு செய்யப்படுகிறது. |
| **12.** | பேரிடர் மேலாண்மை | எதிர்கால கொள்கை முடிவுகளுக்கு பயன்படும் வகையில் மாவட்ட வாரியாக ஏற்படும் இயற்கை பேரிடர் அழிவு மற்றும் மீட்பு தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மாநில அளவில் தொகுக்கப்படுகின்றன. |
| **13.** | சுற்றுச் சூழல் புள்ளிஇயல் | சுற்றுச் சூழல் தொடர்பான புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ‘‘சுற்றுச் சூழல் தொகுப்பாக’’ வெளியிடப்படுகிறது. |

**சமூகப் புள்ளி இயல்**

| | | |
|---|---|---|
| **14.** | தேசிய மாதிரி ஆய்வு | தேசிய மாதிரி ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மக்களின் சமூக பொருளாதார நிலைமை குறித்து அறிவியல் ரீதியான மாதிரி முறையைப் பயன்படுத்தி ஆய்வு |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்படுகிறது. நுகர்வோர் செலவின விவர ஆய்வின் முடிவுகள் மக்களின் வாழ்க்கை தரத்தினை அறிய உதவும் ஒரு கருவியாகவுள்ளது. வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை ஆய்வின் முடிவுகள் தேசிய, மாநில அளவில் மக்களின் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு தன்மைகளை அறிய உதவுகின்றன. இவ்விவரங்கள் மாநில திட்டக் குழுவின் திட்டமிடலுக்குப் பயன்படுகின்றன.<br><br>தற்போது தேசிய மாதிரி ஆய்வு 72–வது சுற்றின் கணக்கெடுப்பு நடைபெற்று வருகிறது. இக் கணக்கெடுப்பு ஜூலை'14ல் தொடங்கி ஜூன்'15ல் முடிவடைந்தது. இவ்வாய்வில் "உள்நாட்டு சுற்றுலா செலவினங்கள்" பற்றிய விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளது. |
| 15. | வீட்டுவசதிப் புள்ளிஇயல் | பொது மற்றும் தனியார் துறைகளில் கட்டுமான விவரங்கள் குறித்த புள்ளி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| **16.** | கட்டுமான செலவு குறித்த குறியீட்டெண் | சில முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை விவரங்கள் மற்றும் கட்டுமான தொழிலாளர்களின் கூலி விவரங்கள் ஆகியன மாநிலத்தின் **16** மாவட்ட மையங்களிலிருந்து சேகரிக்கப்பட்டு காலாண்டு அடிப்படையில் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது. |

**தொழில் புள்ளி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| **17.** | ஆண்டுத் தொழில் ஆய்வு | மாநில வருவாய் மதிப்பீட்டிற்கென தொழிற்சாலை சட்டம் **1948** பிரிவு 2m(i) மற்றும் 2m(ii)ன் கீழ் மாநிலத்தில் பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளின் முதலீடு, கடன், உற்பத்தி மற்றும் கூடுதல் பெறுமானம், தொழிலாளர்கள், சம்பளம், இடுபொருள் ஆகியவை குறித்து ஆண்டு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது. மேற்கூறிய குறியீடுகள் ஆய்வு செய்வதன் மூலம், மாநிலத்தில் தொழில் உற்பத்தி துறையின் பங்களிப்பையும் மற்றும் உள்நாட்டு உற்பத்தியையும் மதிப்பிடுவதற்கும் உதவுகிறது.<br>தற்போது, **2013–14**ஆம் ஆண்டிற்கான ஆண்டு தொழில் ஆய்வு, தமிழ் நாடு மாநிலத்தில் |

| | | |
|---|---|---|
| | | உள்ள பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகளில் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. |
| 18. | தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் | கனிமம், உற்பத்தி மற்றும் மின்சாரம் ஆகிய மூன்று பெரும் தொழில் பிரிவுகளிலிருந்து ஒவ்வொரு மாதமும் உற்பத்தி விவரம் பெறப்பட்டு அதனடிப்படையில் தொழிற் உற்பத்திக் குறியீட்டெண் கணிக்கப்படுகிறது.<br><br>2014–15ஆம் ஆண்டிற்கு, கனிமம் தொகுப்பில் 14 வகையான விவரங்களும், உற்பத்தி தொகுப்பில் 1373 தொழிற்சாலை களிலிருந்து 368 வகையான விவரங்களும் மற்றும் மின்சாரத் தொகுப்பில் ஒரு வகைக்கும், மாதாந்திர உற்பத்தி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. |
| 19. | கைத்தறிப் புள்ளி விவரம் | கைத்தறி துணியின் உற்பத்தி, விற்பனை மற்றும் இருப்பு ஆகிய விவரங்கள் காலாண்டுதோறும் சேகரிக்கப்பட்டு நெசவாளர்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆய்வு ஒவ்வொரு ஆண்டும் மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>சென்னை, கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் அமைந்துள்ள |

| | | |
|---|---|---|
| | | **195** குவி மையங்களிலிருந்து கைத்தறி ஆய்வு மேற்கொள்ளப் பட்டு வருகிறது. |

**மாநில வருவாய் புள்ளி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| **20.** | மாநில வருவாய் மற்றும் மாவட்ட வருவாய் மதிப்பீடு | பொருளாதார வளர்ச்சியைக் கணிக்க உதவும் வகையில் **17** உட்பிரிவுகளின் கீழ் மொத்த / நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (மாநில வருவாய்) மற்றும் தனிநபர் வருவாய் ஆகியவை மாநில அளவிலும், மாவட்ட வருவாய் மதிப்பீடுகளும் ஒவ்வொரு வருடமும் கணிக்கப்படுகின்றன.<br><br>மாநில வருவாய் மதிப்பீடுகள் **2004–05**ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு தமிழ் நாட்டிற்கு **2011–12**ஆம் ஆண்டிற்கு திருத்திய மதிப்பீடும், **2012–13**ஆம் ஆண்டிற்கு துரித மதிப்பீடும், **2013–14**ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடும், **2014–15**ஆம் ஆண்டிற்கு முன் மதிப்பீடு தற்காலிகமும் நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.<br><br>மாவட்ட வருவாய் மதிப்பீடுகள் (அடிப்படை ஆண்டு: **2004–05)** **2004–05**ஆம் ஆண்டு முதல் **2011–12**ஆம் ஆண்டு வரையில் |

| | | |
|---|---|---|
| | | நடப்பு மற்றும் நிலையான விலையில் கணிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. |
| 21. | மாநிலக் கணக்குகள் | அரசின் ஆண்டு நிதிநிலை அறிக்கை விவரங்களும், 12 மாநகராட்சிகள், 125 நகராட்சிகள், 529 பேரூராட்சிகள், 385 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளின் வரவு–செலவு கணக்கு விவரங்களும் சேகரிக்கப்பட்டு அவ்விவரங்கள் மாநில வருவாய் மதிப்பீடு கணிக்க பயன்படுத்தப்படுகிறது. |
| 22. | மூலதன ஆக்கம் | மாநில பொதுத் துறைக்கான மொத்த நிலையான மூலதன ஆக்கம் கணிக்கப்பட்டு அதன் அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்படுகின்றது. |

**விலைவாசிப் புள்ளி விவரங்கள்**

| | | |
|---|---|---|
| 23. | அங்காடிப் புலனாய்வுத் திட்டம் மற்றும் விலைகள் | மாநிலத்தில் உள்ள 96 அங்காடி புலனாய்வு மையங்கள் மூலம் முக்கிய வேளாண்மைப் பொருட்களின் விலைகள், வரத்து, இருப்பு, அனுப்புகை போன்ற விவரங்கள் சேகரிக்கப்படுவதன் மூலம் அங்காடியின் அன்றாட நிலவரம் அறியமுடிகின்றது. |

| | | |
|---|---|---|
| **24.** | மொத்த விலைக் குறியீட்டெண் | வேளாண்மை மற்றும் தொழில் சார்ந்த பொருட்களுக்கான மொத்த விலை விவரங்கள் சேகரித்து ஒவ்வொரு மாதமும் தமிழ் நாட்டிற்கான மொத்த விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது. |
| **25.** | நுகர்வோர் விலைக் குறியீட்டெண் | நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்க ஆறு மையங்களுக்கான விலைவாசிப் புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டு சிம்லா தொழிலாளர் அமைப்பகத்திற்கு அளிக்கப்படுகின்றது. இத்துறை மூலமாக மாதந்தோறும் கடலூர் மற்றும் நாகர்கோயில் மையங்களுக்கு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணிக்கப்படுகின்றது. |

**வெளியீடுகள்**

| | | |
|---|---|---|
| **26.** | வெளியீடுகள் | இத்துறையிலிருந்து முக்கியமாக தமிழ்நாடு புள்ளிஇயல் கையேடு, ஆண்டு புள்ளிஇயல் தொகுப்பு, பருவமும் மற்றும் பயிரும் பற்றிய அறிக்கை, மாவட்ட புள்ளிஇயல் கையேடு, வட்டாரப் புள்ளிஇயல் கையேடு முதலிய வெளியீடுகள் வெளியிடப்படுகின்றன. |

## 3.2.4 மனித வள மேம்பாடு

துறை நடவடிக்கைகளை திறம்பட செயல்படுத்துவதற்கு முதுகெலும்பாக இத்துறையின் பணியாளர்கள் திகழ்கின்றனர். இத்துறையில் பணியாளர்களின் நலனில் போதிய கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### காலிப் பணியிடங்கள் நிரப்புதல்

காலிப்பணியிடங்கள் காரணமாக பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பணிச் சுமையை குறைக்கும் வகையில் அனைத்து நிலைகளிலும் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக 231 புள்ளிஇயல் உதவி ஆய்வாளர்கள், நான்கு தட்டச்சர்கள், ஒரு சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்கள் நிரப்பப்பட்டன. மேலும், கருணை அடிப்படையில் ஐந்து இளநிலை உதவியாளர்களும், வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக ஒரு ஓட்டுநர், 13 அலுவலக உதவியாளர்கள் ஆகியோரும் பணியமர்த்தப்பட்டனர். தமிழ் நாடு முன்னாள் இராணுவத்தினர் கழகம் (TEXCO) மூலம் தொகுப்பூதியத்தில் ஒரு ஓட்டுநர் பணியிடமும் நிரப்பப்பட்டது. மேலும், 268 புள்ளிஇயல் உதவி ஆய்வாளர் பணியிடம் நிரப்புவதற்காக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அறிவிக்கை வெளியிட்டுள்ளதுடன் தேர்வு செய்யும் பணி தொடரப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சமீபத்தில் 23 உதவி புள்ளி இயல் இயக்குனர் பணியிடங்களின் நேரடி

நியமனத்திற்கான எழுத்துத் தேர்வு முடிவை வெளியிட்டுள்ளது.

### 3.2.5. பகுதி–II திட்டங்கள் 2014–15

இத்திட்டத்தில் நான்கு கணிப்பொறிகள் வாங்குவதற்கும், கருத்தரங்குகள், ஆய்வுக் கூட்டங்கள் மற்றும் பயிலரங்குகள் ஆகியவற்றை இத்துறையிலும், தமிழ்நாடு மாநில புள்ளிஇயல் பயிற்சி நிறுவனத்திலும் நடத்துவதற்காக 17.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.2.6. தமிழ் நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம்

பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்காக அவர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டி 'தமிழ்நாடு மாநில பயிற்சி நிறுவனம்' நிறுவப்பட்டு, தற்பொழுது அரசால் ஒப்புளிக்கப்பட்ட பதவிகளில் இயக்குநருடனும், மற்ற பணியாளர்களைக் கொண்டும் 01.05.2012 முதல் பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை தலைமையிட வளாகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றது.

தமிழ்நாடு மாநில புள்ளி இயல் பயிற்சி நிறுவனம், பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறை பணியாளர்களுக்கு உரிய கால இடைவெளியில் பின்வரும் பயிற்சிகளை பல்வேறு துறை வல்லுநர்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

- ✓ பொருளாதாரம் மற்றும் புள்ளி இயல் தொடர்பான அடிப்படைக் கொள்கைகள், அலுவலக புள்ளிஇயல் அமைப்பு, அது தொடர்பான முறைகள், காரணங்கள் பகுத்தாய்தல் தொடர்பு திறமைகள்,

அறிக்கை தயாரிக்கும் திறமைகள் போன்றவற்றில் அறிமுகப் பயிற்சிகள்.

✓ தேவை அடிப்படையிலான குறுகிய கால பயிற்சிகள் முறையே தேசிய மாதிரி ஆய்வு, மாநில வருவாய் கணக்கீட்டு முறைகள், புள்ளி இயல் தொகுப்புகளின் பயன்பாடுகள், மென்பொருள் உருவாக்குதல், தகவல் விவரங்களை பாதுகாத்தல் மற்றும் கணினி மேலாண்மை.

இந்நிறுவனத்திற்கு, 2014–15ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திருத்திய மதிப்பீடு 61.12 இலட்சம் ரூபாய் ஆகும். இம்மதிப்பீட்டுத் தொகையில், 11 விதமான பயிற்சிகள் 19 தொகுதிகளாக நடத்தப்பட்டு, 445 பணியாளர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

## 3.3 மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

நாட்டில் செயல்படுத்தப்படும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் நிதியளித்து நிறைவேற்றி வருகின்றன. அந்தத் திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை நுட்பத்துடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீட்டாய்வுகளை மேற்கொண்டு கொள்கைகள் வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு அரசுக்கு உதவி வருகிறது.

**3.3.1 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்; மற்றும்

(iii) வருடாந்திர வெளியீடான 'தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை' ஆவணத்தை தயாரித்து வெளியிடுதல்.

**3.3.2** தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்கள் இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பாசனபரப்பு மேம்பாடு மற்றும் நீர்மேலாண்மை திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**3.3.3** கீழ்க்கண்ட நோக்கங்களைக் கண்டறிவதற்காக மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

i. திட்ட வடிவமைப்பு

ii. திட்ட செயல்முறை மற்றும் செயல் விளைவுகளை மதிப்பிடல்

iii. செயல் இலக்கு மற்றும் நிதி இலக்கில் காணப்படும் முன்னேற்றம்

iv. திட்ட நோக்க நிறைவேற்றம்
v. திட்டப்பயன்கள் குறிப்பிட்ட பயனாளிகளைச் சென்றடைகின்றனவா என்று ஆய்வதுடன் செலவழிக்கப்படும் தொகைக்கு உரிய மதிப்பிலான பயன்கள் ஏற்பட்டனவா என்று ஆய்தல்

**3.3.4** ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட முடிவுகளும், ஆலோசனைகளும் திட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் திட்டத்தை முறைப்படுத்தி நன்கு செயல்படுத்த உதவுகின்றன.

இத்துறையால், இத்துறை தொடங்கப்பட்ட திலிருந்து, மார்ச் – **2015** ஆம் ஆண்டு வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த **730** மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த மதிப்பீட்டாய்வுகள் சமூகநலம், சுகாதாரம், நீர்ப்பாசனம், வேளாண்மை, வனம், கல்வி, வீட்டுவசதி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், தோட்டக்கலை, போக்குவரத்து, ஊரக வளர்ச்சி, உள்பட பல்வேறு துறைகளின் திட்டங்களை சார்ந்ததாகும்.

### 3.3.5 2014–15 ஆம் ஆண்டுக்கான பகுதி–II திட்டம்:

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் தரமான தன்னிச்சையாக வெளியார் நிறுவனம் மற்றும் பட்டதாரி / முதுகலை பட்டதாரிகளை நியமித்து மதிப்பீட்டு ஆய்வுகளை மேற்கொள்வதற்கு ரூ.**57.00** இலட்சம் பகுதி-II திட்டத்தின் கீழ் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

1. இத்துறைக்கு மடிக்கணினி, கலர் ஜெராக்ஸ், பிரிண்டர் மற்றும் துணைப்பொருட்கள் வாங்குதல்;
2. ஸ்பைரல் பைண்டிங் இயந்திரம் வாங்குதல்;
3. இத்துறையின் தொழில் நுட்பப் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு மாநில / தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளித்தல்;
4. மதிப்பீட்டாய்வுகளை தரமான / தன்னிச்சையான நிறுவனங்கள் மற்றும் பட்டதாரிகள் / முதுகலை பட்டதாரிகள் வேலை வாய்ப்பு மூலம் மேற்கொள்ளல்.

### 3.3.6 2015–16 ஆம் ஆண்டிற்கான ஆய்வுகள்:

**2015–16** ஆம் ஆண்டில் பல்வேறு துறைகளைச் சார்ந்த **20** ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், பாசனப்பரப்பு வளர்ச்சித் திட்டம், பல்வேறு துறை சார்ந்த முக்கிய திட்டங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இவை தவிர, **2014–15**ஆம் ஆண்டு தமிழ்நாடு – பொருளாதார ஆய்வறிக்கை தயாரித்து வெளியிடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் **8.8.2014** அன்று தமிழக சட்டசபையில் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் ஆக்கத்திறமையை ஜே–பால், கிழக்கு ஆசியாவின் உதவியுடன் வளர்க்க விதி எண் **110**ன் கீழ் அறிவித்தார். **2015–16**ஆம் ஆண்டு இந்த இலக்கினை அடையும் பொருட்டு மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித்துறை மேற்கொள்ளும் மதிப்பீட்டு அறிக்கையின் தொழில் நுட்பத் திறமையை வலுப்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த

நடவடிக்கைகளில் ஒன்றாக, தமிழ்நாட்டில் **0–6** வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்தினை அறியவும் மேலும் ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் செயல்படும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாட்டினை அறியவும் ஒரு மதிப்பீட்டு ஆய்வினை செயல்படுத்த ஜே–பால், கிழக்கு ஆசியா, மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைக்கு உதவியது. இந்த ஆய்வானது நான்கு ஆய்வுகளை உள்ளடக்கியது. மேலும் இவை தமிழ்நாட்டின் **32** மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்படும்.

## 3.4 சென்னை மெட்ரோ இரயில் திட்டம்

சென்னைப் பெருநகரம் அதிவேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனால் சாலைகளில் போக்குவரத்தின் அளவும் அதிகரித்து வருவதால், போக்குவரத்து கட்டமைப்பு அதிக அளவில் தேவைப்படுகின்றது. இந்த தேவையைப் பூர்த்தி செய்வதன் முதற்கட்டமாக, ஒரு புதிய துரித இரயில் போக்குவரத்துத் தேவையின் அவசியத்தை உணர்ந்து, தமிழ்நாடு அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தை நிறைவேற்றிட முடிவு செய்துள்ளது. இந்தத் திட்டத்தின் குறிக்கோள் சென்னைப் பெருநகர மக்களுக்கு வேகமான, நம்பத்தக்க, வசதியான, திறன்மிக்க மற்றும் சிக்கனமான பொதுப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவது ஆகும். மேலும் இத்திட்டம் இதரப் பொது மற்றும் தனியார் போக்குவரத்து வசதிகளாகிய, பேருந்து, புறநகர் இரயில்கள் மற்றும் பெருந்திரள் துரித இரயில் போக்குவரத்துத் திட்டங்களுடனும், மேலும் எதிர்காலத்தில் மோனோ இரயில் உள்ளிட்ட கூடுதல் இரயில் அமைப்புகளுடனும் சீரிய முறையில் ஒருங்கிணைக்கப்படும்.

டில்லி மெட்ரோ இரயில் நிறுவனம் (சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை ஆலோசகர்) தயார்செய்து வழங்கிய விரிவான திட்ட அறிக்கையின் அடிப்படையில் இரண்டு வழித்தடங்கள் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வண்ணாரப்பேட்டை முதல் சென்னை விமான நிலையம் வரை **23.1** கி.மீ நீளத்திலும் மற்றும் சென்னை சென்ட்ரலிலிருந்து புனித தோமையார் மலை வரை **22.0** கி.மீ நீளத்திலும் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த வழித்தடங்களில் கீழ்காணும் நிறுத்த நிலையங்கள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது:

வழித்தடம்–**1**: வண்ணாரப்பேட்டை – மண்ணடி – உயர்நீதி மன்றம் – **சென்னை சென்ட்ரல்** – அரசினர் தோட்டம் – எல்.ஐ.சி. – ஆயிரம் விளக்கு – ஏ.ஜி–டி.எம்.எஸ் – தேனாம்பேட்டை – நந்தனம் – சைதாப்பேட்டை – சின்னமலை – கிண்டி – **ஆலந்தூர்** – நங்கநல்லூர் சாலை – மீனம்பாக்கம் – சென்னை விமானநிலையம் ; மற்றும்

வழித்தடம்–**2**: **சென்னை சென்ட்ரல்** – எழும்பூர் – நேரு பூங்கா – கீழ்ப்பாக்கம் – பச்சையப்பன் கல்லூரி – செனாய்நகர் – அண்ணாநகர் கிழக்கு – அண்ணாநகர் கோபுரம் – திருமங்கலம் – கோயம்பேடு – புறநகர் பேருந்து நிலையம் – அரும்பாக்கம் – வடபழனி – அசோக் நகர் –

ஈக்காட்டுதாங்கல் – **ஆலந்தூர்** – பரங்கிமலை.

மேற்கண்டுள்ள இரண்டு வழித்தடங்களும் சென்னை சென்ட்ரல் மற்றும் ஆலந்தூரில் ஒன்றாக இணையும். வழித்தடம்–1 இல் வண்ணாரப்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரையிலுள்ள பகுதி மற்றும் வழித்தடம்–2இல் சென்னை சென்ட்ரல் முதல் திருமங்கலம் வரையிலுள்ள பகுதி நிலத்திற்கடியிலும் எஞ்சியுள்ள பகுதிகள் உயர்த்தப்பட்ட நிலையிலும் செயல்படுத்தப்படும்.

மேலே குறிப்பிட்டுள்ள இரண்டு வழித்தடங்களுக்கும் தமிழ்நாடு அரசு தனது கொள்கை அளவிலான ஒப்புதலை வழங்கியதைத் தொடர்ந்து, மத்திய அரசின் நிதியுதவி மற்றும் உள்நாட்டு மற்றும் பன்னாட்டு நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெறுவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது. இத்திட்டத்தினை மத்திய அரசும் மாநில அரசும் கூட்டாக இணைந்து 14,600 கோடி ரூபாய் செலவில் கட்டிமுடிப்பதற்கு மத்திய அரசு தனது நிர்வாக ஒப்புதலை பிப்ரவரி 2009 இல் வழங்கியுள்ளது. ஏற்கனவே அமைக்கப்பட்ட சிறப்புவகை நிறுவனத்தை (Special Purpose Vehicle) ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கவும் உத்தேசிக்கப்பட்டது. மத்திய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தை பங்கு மூலதனமாகவும், 5 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. அதே போன்று தமிழ்நாடு அரசும் திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதத்தைப் பங்கு மூலதனமாகவும், 5.78 சதவிகிதத்தை சார்நிலைக் கடனாகவும் தர ஒப்புக்கொண்டுள்ளது. மீதமுள்ள 59.22 சதவிகிதத்தை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு

முகமையிடமிருந்து (Japan International Cooperation Agency) மத்திய அரசு இதுபோன்ற வெளிநாட்டு கடனுதவி பெறுவதற்கு வெளியிட்டுள்ள வரைமுறைகளுக்கிணங்க கடனாகப் பெறப்படும்.

தமிழ்நாடு அரசு ‘சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட்’ என்ற நிறுவனம் கம்பெனிகள் சட்டத்தின் கீழ் ஏற்கனவே நிறுவப்பட்டது. இந்நிறுவனம் பின்னர் மத்திய மற்றும் மாநில அரசுகளின் பங்குகளை வெளிக்காட்டும் வகையில் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக மாற்றியமைக்கப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தின் செயலாளரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மத்திய அரசும், மேலாண்மை இயக்குநரையும் சேர்த்து 5 இயக்குநர்களை மாநில அரசும் நியமித்துள்ளன.

தமிழ்நாடு அரசு 2261.82 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும் 1442.22 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் வழங்கியுள்ளது. மத்திய அரசு 31.3.2015 வரை 1950.53 கோடி ரூபாயைப் பங்கு மூலதனமாகவும், 287.45 கோடி ரூபாயைச் சார்நிலைக் கடனாகவும் மற்றும் 5304.59 கோடி ரூபாயை ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமையின் முதுநிலைக் கடனை நிறுவனத்திற்கு அனுப்பும் உதவியாகவும் வழங்கியுள்ளது.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மாநில அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்கள் அரசாணைகள் மூலம் பெறப்படுகின்றன. மத்திய அரசு மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் நிலங்களை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் நேரடியாகப் பெற்றுள்ளது. தனியார் நிலங்களைப்

பொறுத்தவரையில், நிலக் கையெடுப்புச் சட்டம் 1894இன் கீழ் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

பெரிய அளவிலான கட்டுமானம் மற்றும் அமைப்பு சார்ந்த ஒப்பந்தங்கள் ஏற்கனவே வழங்கப்பட்டு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. உயர்த்தப்பட்ட வழித்தடங்கள் மற்றும் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் 85 சதவிகிதமும், கோயம்பேட்டில் உள்ள பணிமனை கட்டுமானங்கள் 95 சதவிகிதமும், நிலத்தடி நிலையங்கள் மற்றும் தொடர்புடைய சுரங்கப்பாதைகளின் கட்டுமானப் பணிகள் 60 சதவிகிதமும் முடிவுற்றுள்ளன. 2014–15 ஆம் ஆண்டு இறுதிவரை ஒட்டுமொத்த செயலாக்க சாதனை 76 சதவிகிதமாகும். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயிலை பன்முக போக்குவரத்துகளான பேருந்து, புறநகர் இரயில், பெருந்திரள் இரயில் மற்றும் மோனோ இரயிலுடன் ஒருங்கிணைப்பதை உறுதி செய்யும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதனால் பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொன்றிற்கு சிரமமேதுமின்றி மாறிச் செல்ல வசதியாக இருக்கும்.

வரலாற்று நிகழ்ச்சியாக, கோயம்பேடு முதல் ஆலந்தூர் வரையிலான (10.15 கி.மீ) உயர்த்தப்பட்ட வழித்தடப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 29.6.2015 அன்று பயணிகள் சேவை துவக்கி வைத்தார்கள்.

### 3.4.1 கட்டம்–I இன் நீட்டிப்பு மற்றும் கட்டம்–II வழித்தடங்கள்

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் வழித்தடம்–1ஐ தற்போதுள்ள வடக்கு முனையமான வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் / விம்கோ

நகர் வரையில், ரூ.3770 கோடி செலவில் நீட்டிப்பதற்கான கருத்துருவிற்கு மத்திய அரசின் ஒப்புதலை பெறுவதற்கு இந்த அரசு முயற்சித்து வருகின்றது.

இரண்டாம் கட்ட வழித்தடங்களைச் செயல்படுத்துவதற்கான வரைவு சாத்தியக்கூறு ஆய்வு / விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியை அரசு, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளது. விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ரூ.8 கோடிக்கு தமிழ்நாடு உள்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர்**